உ

கணபதி துணை

நாகமகூளப்ப நாயகன்

விறலிவிடு தூது

சுப்பிரதீபக் கவிராயர்
இயற்றியது

திருத்திய புதிய பதிப்பு

P. L. அருணுசல முதலியார் & பிரதர்ஸ்,
ஸ்ரீ வித்தியா பிரஸ்,
மதராஸ்

காப்பிரைட்] 1948 [விலை ரூ. 1.

உ

கணபதி துணை

நாகம கூளப்பநாயகன்

விறலிவிடு தூது

சரவணப்பெருமாளையரால்

பரிசோதித்த பிரதிக்கிணங்க

திருத்திய புதிய பதிப்பு

Expurgated Edition

P. L. அருணாசல முதலியார்

அருணா பிரஸ்,

70, படவட்டம்மன் கோவில் தெரு,

சென்னை-12.

காப்பிரைட்] 1948 [விலை ரூ. 1-0-0

உ

கடவுள் துணை

விறலிவிடு தூது

காப்பு

நேரிசை வெண்பா

பொங்குபெருஞ் செல்வப் புகழ்பெரிய நாகன் போர்த்
துங்கன் விறலிவிடு தூதுக்கு-மங்களஞ்சேர்
பஞ்சவருக் கங்களுமுற் பைம்பொனெடுங் குன்றிடுகைக்
கஞ்சமலர்க் குஞ்சரமே காப்பு.

நூல்

விறலிபுகழ்ச்சி

கார்பூத்தமேனிக்கருணைத்திருநெடுமால்
பார்பூத்தவுந்திப்பரந்தாமன்-நீர்பூத்த 1

வேலைகுமுறக்கடைந்தவேலைதருந்தெள்ளமுதும்
ஆனைதருவெண்சாறடுபாகும்-பாலும் 2

கனியுஞ்சருக்கரையுங்கற்கண்டுநாவுக்
கினியபசுந்தேனுமிணைக்கித்-தனியாக 3

மத்தித்தெடுத்தமதுரத்துக்கெண்மடங்கு
தித்திப்புக்கேட்போர்செவிக்கேறத்-தத்தைகள்போய்க் 4

குன்றேறத்தோற்றுக்குயின்மாமரந்தோறுஞ்
சென்றேறவானிற்சிறுகூரரி-நின்றொருதுங்கி 5

விண்ணேறவந்தரத்தில்விஞ்சையரேறக்கனிந்த
பண்ணேறப்பாடுமிசைப்பாடினியே-உண்மையருள் 6

போதிக்குமெய்த்தவத்தோர்புத்திக்கிடையூரு
நாதிக்குமேழிசைக்குநாயகமே-கீதக் 7

கொழுந்தோடிமன்னவராங்குன்றிற்படரக்
கொழுந்தோடிபாடிவருங்கொம்பே-எழுந்தசிமிழ் 8

கண்டாராகத்திலொருகாமப்பேயேற்றுவிக்குங்
கண்டாராகத்தில்வல்லகாரிகையே-கொண்டைநெடுங் 9

கண்சுருட்டியோகர்கருத்தறிவெல்லாஞ்சுருட்டிப்
பண்சுருட்டிபாடுமுயிர்ப்பாவையே-ஒன்கிரணக் 10

காந்தாரக்கொங்கையின்மேற்கைத்தம்புருவணைத்துக்
காந்தாரமேற்றுங்கனிமொழியே-சேந்தவரி 11

யம்பகாம்போதிலணங்குமிணங்குமிசைக்
கும்பகாம்போதிரசகும்பமே-துன்புருதன் 12

மாகரஞ்சிதத்தனியாழ்பட்டுறையிலிட்டயர
மேகரஞ்சிபாடும்விறலியே.லோகத்திற் 13

காகவறிவின்றிக்கலந்தனில்வைத்துண்பாரைத்
தேகியென்பார்க்கீயாததியாரை-ராகமெனுங் 14

கள்ளக்கயிறுகொண்டுகட்டியுருட்டிவிழுத்
துள்ளுமுலைச்சாடடைகொண்டுசுண்டியே-தெள்ளமிர்தத் 15

தீங்குதலைச்சொல்லாற்றித்தேட்டையெல்லாம்
வாங்கிவிடவல்லமதங்கியே-நீங்கிவெறுப் 16

பானமடவார்க்குமாடவர்க்குநல்லசமா
தானநிதானவவதானியே-கானவித்தைப் 17

பாட்டையெல்லாங்கற்றபனிமொழியேநான்பட்ட
பாட்டையெல்லாஞ்சற்றேபகரக்கேள்-வேட்டமனை 18

அவதானி தன் சம்பவந்தொகுத்துரைத்தல்

யாட்டியுடன்போட்டிவிளைத்தாட்டிவிட்டபம்பரம்போல்
நாட்டையெல்லாம்சுற்றியதும்நானொருநாள்-தோட்டிதழிப் 19

பூவுடையான்றென்மதுரைப்புக்கதுவுமங்கேயோர்
தேவடியாள்கைக்குள்ளாய்ச்சிக்கியதும்-பாவிகிழ 20

வோரியென்கைப்பொன்னையுறிஞ்சியதும்போழ்வாய்த்துச்
சாரிசதியெய்ததுவும்வைததுவும்-போராடி 21

மேரைகெடவம்பலத்தில்விட்டதுவும்வாய்ப்பகட்டால்
ஊரைவிடப்பற்றியெனைவோட்டியதும்-பேராசை 22

அங்கேயிழுக்கமனதாகிவழிகொண்டுபுகல்
எங்கேயென்றென்பதூர்க்கேகியதும்.சங்கேந்தும் 23

திம்மராயப்பெருமாள்செஞ்சரணசேகரனை
மும்மதமால்யானைமூர்த்தன்னியனை-ரம்ய 24

கருணாகரனைக்கனயோகவானைப்
பொருநாவலர்பூஷணனை-இருநிதியைச் 25

சந்த்ரமுகந்த்ரளதந்த்ரகொலுவிந்திரனைச்
சிந்தமகுமாரசெய்தரனை-முந்து 26

நிலைக்கோட்டையானைநெடுங்கலியைத்தூரத்
துலைக்கோட்டுந்த்வாகதுரையை-மலைக்கோட்டில் 27

ஆளைவைத்துப்பார்க்குமறுபத்துநாலுமன்னர்
பாளையத்தைவென்றபடையானை-வாளரசர் 28

வெஞ்சமருக்கஞ்சாவிருதுவென்றிவாகனைநம்
பெஞ்சநகர்காக்கும்பெருமானை-வஞ்சகர்க்கோர் 29

தண்டப்பெரும்புலியைச்சாமித்துரோகரைக்காய்
வெண்டயத்தாற்சூரியனைவீரியனை-மண்டலிகர் 30

மாகனங்கப்பமிடும்வாயிலானைப்பெரிய
நாகமகூளேந்த்ரநராதிபனை-யோகனையான் 31

பாடியதுமையன்முகம்பார்த்ததுவுமென்கலிவிட்
டோடியதும்பாக்கியம்வந்துற்றதுவும்-நாடியிங்கே 32

தான்வந்ததுவுநடுமதியிலேயிரண்டு
மான்வந்தனையவிழிமாதேகேள்-தானபரன் 33

பாட்டுடைத் தலைவன் புகழ்ச்சி

திக்கெல்லாங்கொண்டாடுஞ்செங்கோல்விஜயரங்க
சொக்கநாதேந்த்ரதுரைராஜன்-சக்ரபதி 34

சேதுபதிபாண்ட்யகுலதெக்ஷிணசிங்காசனந
ராதிபதிமெச்சுநரபாலன்-கோதில் 35

உருப்பான்மைவெண்பிறைமேலூர்வதுதன்கோல
மருப்பாகும்பன்றிமலையான்-திரைக்கரத்தில் 36

ஆரமணியாரமணியாரமணிவாரிநடு
வாரியிடுங்குடவமாநதியான்-தார்வேந்தர் 37

வீதிக்குவீதிவிவாகமணிமுரசம்
நாதிக்கும்பாண்டிவளநாட்டினன்-ஆதித்தன் 38

தேரூருணசெயகோபுரநிலைக்குள்
ஊரூறெனுமென்பதூரினன்-சூரியபோர் 39

வேலைவைக்குஞ்செங்கருங்கண்மின்னரிதயவண்டு
மாலைவைக்கும்பூந்தளவமாலையான்-கோல 40

முகமிலங்குபணியணிந்துமுதுகணைந்தகலனைகொண்டு
தகைதவிர்ந்துநடைபிறந்துசமரடர்ந்து-பகைவர்தங்கள்

தலையினின்றுதிமிதிதிந்திதகுதிதந்தயெனநடஞ்செய்
துலவிவந்துகனகதண்டை யொலிமிகுத்து-கலகலென்று

கொஞ்சிடச்சதங்கையிட்டகொண்டலொத்திடுந்திறத்த
வெஞ்சினப்ரசண்டவுக்ரவெண்பரியான்-விஞ்சுகரம் 43

ஒன்றுபடைத்துவருமோங்கலுக்கொப்பாயிரண்டு
வென்றிப்பிறைசுமந்தமேகமெனத்-துன்று 44

மதங்களொனுமூன்றுமாரிசிந்தப்பாகர்
ஒதுங்கநால்வாயாலுதறி-அதிர்ந்துபொரும் 45

அஞ்சாருதிரத்தையாருக்கியோரேழு
மஞ்சார்புனலைமடுத்துறஞ்சிக்-குஞ்சரங்க 46

ளென்பதோரெட்டுமிணையில்லையென்றகற்றி
ஒன்பதூர்வீதியுலாவியே-வம்புரைப்போர் 47

பைம்பொன்முடியிடறிப்பத்துநகமுந்தேய்ந்த
கும்பரணகம்பீரகுஞ்சரத்தான்-அம்புவியில் 48

காந்துகலியைவெட்டுங்கண்டகோடாரியைப்போல்
ஏந்துவெள்ளைப்பக்கறையிடாலினன்-சாய்ந்தோடிக் 49

குன்றிற்கருதார்குடும்பங்குடியேற
முன்றிற்குமுறுமணிமும்முரசான்-நின்றவடி 50

தூக்கினார்சென்னி துடிக்கத் துணித்துவிடும்
ஆக்கினாசக்கரம்போலாணையான்-பாக்கியவான் 51

கற்பகமாம்பட்டரையங்கார்கருணையேமணக்கும்
பொற்கமலம்போன்றமனப்பூரணவான்-பற்றலார் 52

தண்டார்மகுடந்தடவுஞ்சயவீர
கண்டாமணிமுழங்குங்காலினான்-மண்டுசமர் 53

யுத்தகளத்தொன்றாருயிர்மேய்ந்தகுற்றுடைவாள்
வைத்தணைத்துக்கட்டுமருங்கினான்-கைத்தலத்தில் 54

ஐந்தருவுமைந்துவிரலாகித்தருவனச்
செந்தமிழ்க்குநல்குமலர்ச்செங்கையான்-பைந்தொடியார்

பொன்......யாங்கோட்டிற்புதுக்கலவைச்சேறாட்டி
மன்மதநூலெழுதமார்பினான்-நன்மைதரும் 56

வெற்றிச்சிறுபெண்விளையாடுஞ்சிற்றிலெனச்
சுற்றியகேயூரமணிதோளினான்-கற்றவராங் 57

கோக்குலத்தைக்காத்தருளுங்கோபாலர்வேயிசைபோல்
வாக்குமதுரம்பொழியும்வாயினான்-நாக்குளிரச் 58

சொல்லிரசங்கடுவெர்ப்பென்றுதன்னளியின்பக்
கல்லிரபம்பருகுங்காதினான்-வல்ல 59

மருவலரைவெட்டுகின்றவாள்போன்முகத்தான்
கருணையுலவுமலர்க்கண்ணான்-இரவினுடல் 60

சாய்த்தமதிமுகத்துத்தையலார்முத்தமிட
வாய்த்தமுழுமதிபோன் மாமுகத்தான்-காத்தருளும் 61

எம்பிரானார்கோயிலேசரடியெந்நாளும் [ம்
செம்பொன்முடிதாங்குமலர்சென்னியான்-உம்பர்தொழு

நின்மலனார்வெண்ணீற்றுநெற்றிக்கண்காணாத
மன்மதன்காணென்னும்வடிவினான்-தன்னுடைய 63

வல்லக்காவார்குலத்தில்வாள்வேந்தர்கண்குளிரப்
பல்லக்குமேலுலவும்பாக்கியவான்-வில்லேற்றிக் 64

கைகொண்டுபொற்படியிற்கால்கொண்டுபஞ்சகதி
மெய்கொண்டணையபரிமேற்கொண்டு-செய்யரண 65

துங்கதளகர்த்தர் துரைமக்கள்வாள்பிடித்துச்
சிங்கமெனச்சுற்றித்திரண்டுவர-மங்குலெனக் 66

கூனன்முதுகொட்டகமேற்கொட்டுகின்றடம்மாரம்
யானையின்மேற்பெரியதிர்ந்துவரச்-சேனையொடு 67

தாக்குமறுமண்டலிகர்தங்களுக்குச்சென்றுசொல்லுங்
கூக்குரல்போல்வீரசின்னங்கொம்பூத-நோக்கும் 68

பரிதிபகைக்குப்பகையெழுந்ததென்ன
விருதுகருடாலவட்டம்வீசத்-தாளக்கால் 69

வெள்ளைக்கொடியாடைமேகங்கிழித்துவரப்
பிள்ளைப்பிறைபோற்ப்ரகாசிக்க-வெள்ளைவட்டச் 70

சித்ரக்குடைகள்செயமாதுக்கிட்டநிழன்
முத்துமணிப்பந்தரெனமொய்த்துவரக்-கைத்தலத்திற்

கத்திபிடித்துவெள்ளிகட்டின துப்பாக்கிகொண்டு
பத்துலக்ஷங்காலாட்படைநடக்கத்-தத்துபரி 72

கொக்குநரையான்கைக்குமரியெனராவுத்தர்
கைக்குளடங்காதுகானமீறி-நெய்க்கவளம் 73

கூட்டியிறையூட்டியிருகொம்புகத்திபூட்டிமதம்
மூட்டிவிட்டமால்யானைமுன்னடக்கக்-கூட்டமிட்டு 74

வாரிட்டணிவகுத்துவாதிட்டவேற்றரசர்
போரிட்டவெங்களத்திற்போயெதிர்த்து-நேரார்மேற் 75

சுட்டபீரங்கித்தொனியும்புகையுஞ்சூ
விட்டமுகிலுமிடியுமெனப்-பட்டயங்கள் 76

வீசுவதும்வெட்டுவதுமின்னலெனவீரர்சிலை
பூசலம்புமாரிமழைபொற்பொழியத்-தேசப் 77

பாதளங்கள்பட்டுருவப்பாய்ந்தபெருஞ்செந்நீர்ப்
பிரளயப்ரவாகம்பெருகச்-சிரதலத்தில் 78

ஆனையிருப்புலக்கையானைபடிக்கவிழு
மூளைநுரைத்திரளாய்மொய்த்தோட-வாளாற் 79

படுந்தீரரேறிவரும்பல்லக்குப்பேய்க்கு
விடுந்தோணிபோலுமிதப்பக்-கிடந்துசிலர் 80

வேர்த்துப்பரிசைகொண்டுமேன்மூடிச்சென்னியெட்டிப்
பார்த்துக்கமடமெனப்பதுங்கப்-போர்த்தலையில் 81
மந்திரவாள்வேந்தர்மகுடத்துதிர்ந்தரத்நம்
இந்திரகோபங்களெனச்சிதறச்-செந்தறுகண் 82
விந்தைமிடிதீரவெற்றிப்பயிரேற்றி
வந்துகொலுவிருக்கும்வாள்வீரன்-முந்துபெரும் 83
பாதலத்தில்வேரோடிப்பாரிற்படர்ந்துவட
பூதரத்திலேறும்புகழினன்-நீதிபரன் 84
சிந்தமகூளேந்த்ர துரைசிங்காசனதிபதி
தந்தசௌபாக்கியசம்பன்னன்-செந்துவர்வாய்க் 85
காமவடிவேல்விழியார்கைவடிவெல்லாமெழுதும்
நாமவடிவேற்பெரியநாகேந்த்ரன்-சேமநிதி 86
யூராதிபன்வாழ்வையொக்குநவகோடி
நாராயணன்பெரியநாகேந்த்ரன்-சேரலராம் 87
ஆட்டுக்கூட்டங்களிலோராண்புலிபோற்பாயுநடு
நாட்டுக்கூழிற்பெரியநாகேந்த்ரன்-பூட்டுசிலை 88
அம்பொன்ருலீவேனாசுனக்குவீடணு
நம்பென்றமால்பெரியநாகேந்த்ரன்-ஸ்தம்பமெண் 89
லோகஞ்சுமப்பதினுலோராயிரமௌலி
நாகம்பொரும்பெரியநாகேந்த்ரன்-பாகெனுஞ்சொற் 90
பாவுக்கேறிக்கனகப்பல்லக்கேறிப்புலவோர்
நாவுக்கேறும்பெரியநாகேந்த்ரன்-வாவிதிகழ் 91
பெஞ்சநகர்வாழப்பெருஞ்சீர்வளர்ந்தோங்கக்
கஞ்சமலர்மாதுகளிகூர-வஞ்சகமும்
பொய்யும்பறந்தோடப்புண்ணியமுந்தண்ணளியும்
மெய்யுங்கலந்துவிளையாடப்-பெய்யுமழை 93
வானமவழங்கமனைவாழ்க்கையோங்கவன்ன
தானம்வழங்கத்தவமோங்க.நான்மறைக்கும் 94
தன்னிதியாமேகவண்ணநாதர்கிம்மராயர்திருச்
சன்னிதியிற்பூசைதழைத்தோங்க-இந்நிலத்தில் 95
எங்கோனபிஷேகமேந்துமனுவின்ஞானச்
செங்கோலரசுசெலுத்துநாள்-சங்கேந்தும்

அவதானி தன் பிறப்பாதி சொல்லல்

சாரங்கமேனிக்கடவுளிருக்குமந்தச்
சீரங்கத்தேபிறந்தேன்செல்வத்தில்-ஈரைந்தோ 97

டாறுவயதினுக்குளாரியமும்வேதமுநா
வேறித்தமிழ்நூலிலக்கணத்தின்-மீறினேன் 98

வாலசரஸ்வதியென்வாக்கிற்ப்ரசன்னமதா
நாலுகவித்திறமுநானறிந்து-வேலும் 99

மயிலுமெனச்சொன்னவுரைமாறுமற்சொல்லக்
கயிலாடசிங்கிகழற்ற-அயலொருவன் 100

சொன்னவினாச்சொல்லவெதிர்சூதாடப்பின்முதுகு
தன்னிலெறிந்தகல்லுத்தானெண்ணப்-பன்னுசது 101

ரங்கவிளையாட்டுக்கடிபார்க்கச்சொற்புலவோர்
தங்கள்கவியையவதானிக்கச்-சங்கத்தில் 102

எட்டெட்டெழுத்தாணிக்கேற்றகவிசொல்லவும்யான்
அஷ்டாவதானியென்பாருயினான்-மட்டார் 103

திருப்பதியிலேவாசுதேவன்மகளைக்
கருப்புருவவின்பக்கனியை-விருப்பமுள்ள 104

பூங்காவனத்தைப்பொருத்தமுடன்வேட்டுப்
பாங்கானவாழ்விற்பயிலுநாள்-ஆங்குசெவ்வந் 105

தீசர்திருச்சன்னிதியிலேநிழையார்தம்மிலொரு
தாசிமேல்வைத்தேன்றயவுநான்-நேசமாய் 106

இந்தரங்கத்தேதிரிந்தேனின்பரசவல்லியிடத்
தந்தரங்கத்தேதிரிந்தேனாசையால்-அந்தத் 107

திரிச்சிராப்பள்ளிக்குச்செல்லாதிருக்கத்
தரிச்சிராதென்மனதுதானும்-ஒருத்தன் 108

அறியாச்சிறுவனுடன்யாதொருநாளந்த
வெறியார்குழற்பாத்தைவீட்டிற்-பிரியமுடன் 109

சென்றிருந்துவந்தேன்றிடுதிடெனவோடிப்போய்க்
குன்றிருந்தகொங்கைக்குலமனையாட-குன்கணவர் 110

ஓடத்திலேறினருத்தரியம்போக்கடித்தார்
நாடிச்சிரகிரியை நண்ணினர்-கூடவந்த 111

என்னைச்சவுக்கையில்வைத்தின்பரசவல்லியெனும் [ம்
பொன்னணையாள்வீட்டுக்குட்போய்ப்புகுந்தார்- அந்நேர

மிஞ்சிமிஞ்சிப்பேசினள்வேசிமகளதற்குள்
அஞ்சியஞ்சிப்பேசினரையங்கார்-வஞ்சியந்த 113

வீட்டுக்கதவடைத்தாண்மெள்ளமெள்ளக்கொஞ்சினள்
காட்டுப்புருவோசைகாட்டினள்.வீட்டைவிட்டு 114

வந்தார்நம்மையரென்னைவாவென்றுற்காவிரியிற்
சந்திபண்ணிக்கரையிற்றுண்டினர்—இந்தவூர்க்

கென்மார்க்கஞ்சொல்லாதேயென்றுசொன்னரென்றந்தத்
துன்மார்க்கப்பையலெல்லாஞ்சொல்லிவிட்டான்-மன்மம்

தொடுத்தாள்கடுகடுத்தாள்தூங்குமஞ்சம்விட்டுப்
படுத்தாள்பகைஞரைப்போற்பார்த்தாள்-அடுத்தடுத்து

வேண்டினேன்கூட்டுவெளியாக்குவேனென்னைத்
தீண்டாதேயென்றுள்சிராப்பளியில்- ஆண்டவள்பாற்

செல்லாயென்றுள்பரத்தைதேடுவாளேயென்றுள்
சொல்லாதவார்த்தைசிலசொல்லினள்-இல்லாள் 119

வலிகிடந்தமாற்றமுறைக்குமேலவ்வில்
புலிகிடந்ததூருய்விடுமென்-றுலகரியச் 120

யாத்திரை செய்தமை கூறல்

செப்பினளவ்வையென்றுதேர்ந்தேனிராத்திரியே
தப்பினேன்கைக்கடங்கத்தக்கதுகொண்-டப்பால் 121

அதிசயங்களானதலம்யாவுமறிவோம்
நதிகள்பலமூழ்குவோநாமென்-றிதயமாய் 122

வெள்ளைநாவல்பழுக்குமிக்கபதியுந்நரிகள்
துள்ளுபரியானதொருதொன்னகரம்-தெள்ளுதமிழ் 123

செப்பக்கதவுதிறந்தவூருங்கருங்கல்
கப்பலெனவந்தகடற்பதியும்-இப்புறத்திற் 124

பாங்குடையவாண்டுபனிரண்டுக்கோர்கான்மா
மாங்கநீர்பெங்கும்வளப்பதியும்-பூங்குடத்தில் 125

அங்கத்தைமங்கைவடிவாக்கினவூருந்தமிழ்க்குத்
தங்கத்தையீந்ததனியூரும்-செங்கருங்கட் 126

காகமெரியக்கனல்வீசுமாமலையும்
யோகங்கழுகுசெயுமொன்கிரியும்-வேகமிக்க 127

கான்ருண்டுவெம்முதலைகௌவியுண்ட பிள்ளைதனை
மூன்ருண்டுசென்றழைத்தமூதூரும்-மான்ருனேர் 128

தாசிக்கெழுந்ததனத்தைலிங்கமென்ருெருவன்
பூசித்துப்பேறுபெற்றபொன்னகரும்-நேசித்து 129

மைந்தனுடலறிந்துமாதவத்தோர்கிட்டுவினைப்
பந்தமரிந்தோன்பழம்பதியும்-சொந்தமாம் 130

ஆட்டைப்புலிகாக்குமம்பலமுநாலுவசி
நாட்டிநடுக்குதிக்குநன்னகரம்-காட்டெயினன் 131

கண்ணைப்பறிகொடுத்தகற்பதியும்வண்ணுன்றன்
பெண்ணைப்பறிகொடுத்தபேருரும்-மண்ணுலகில் 132

தீண்டாதாரெச்சில்செழுமறையோர்க்கீந்தாலும்
வேண்டாமெனுதேற்குமெய்ப்பதியும்-மாண்டவர்தங் 133

காதிலுபதேசங்கடவுள்சொல்லும்பதியும்
சீதரன்மாயாபுரியுஞ்சேவித்து-நாதிக்குஞ் 341

சங்கமுகந்தங்கெறிதரங்கமுககங்கையுடன்
சங்கமுகதீர்த்தமெல்லாந்தாளுடி-அங்கிருந்து i35

கங்குல்பகலாக்கடலோட்டக்கப்பலிலோர்
திங்களில்வந்தெய்தினேன்சேதுவினில்-மங்காத் 136

தனுக்கோடிதர்ப்பசயனம்பணிந்து
மனுக்கோடிசூழ்செந்தூர்வந்தேன்-கனத்த 137

திருப்பதிகளொன்பதுநான்சேவித்தங்குள்ள
அருட்பொலியுந்தீர்த்தமெல் லாமாடித்-தருப்பொலியும்

குற்ருலநெல்வேலிகோதைவில்லிபுத்தூர்வந்
துற்றேன்றிருச்சுழிகையூர்பணிந்தேன்-நெற்றிவிழித்

தம்பிரான்பூவனத்தைச்சந்தித்தேன்சங்கேந்தும்
எம்பிரான்சோலைமலைக்கெய்தினேன்-பைம்பொற் 140

தலையருவியாடியெங்கள்சங்கத்தழகர்
மலரடியைப்போற்றிமகிழ்ந்தேன்-ஸ்தலமகிமை 141

யானதினாலஞ்சுநாளங்கிருந்தேனங்கேயோர்
ஞானியையன்றன்னுடனேநட்பானேன்-மேன்மையீர்

சொக்கர்மதுரைதொழுதுவரவேநீரும்
ஒக்கவரவேண்டுமெனவுரைத்தேன்-தக்கோன் 143

நகைத்தானிவ்வண்ணநடந்தகதையுண்டு
தொகுத்தமறைவேதியரேசொல்வேன்-மிகுந்தபுகழ் 144

ஞானியார்நல்வழியுரைத்தமை கூறல்

மேவிச்சிறந்தகொந்திவேந்தனொற்றியூர்த்திருநாள்
சேவிக்கப்போகமனஞ்சிந்தித்தான்-தாவில் 145

அமைச்சனங்கேசென்றக்காலங்கொருத்திவல்லி
உமைச்சதிசெய்வாளென்றுரைத்தான்-அமைச்சனுரை

மிஞ்சிநடந்தானந்தவேசைகைக்குட்சிக்கினான்
வஞ்சிமருந்தான்மதிகெட்டான்-குஞ்சரமும் 147

நாடுநகருநவநிதியும்வாங்கினாள்
ஓடுங்குழையுமாவோட்டினாள்-ஆடுகின்ற 148

கூத்தாடிகள்வன்போற்கோலம்பூண்டாடுவதைப்
பார்த்தீரிலையோசொற்பாவலீர்-வாய்த்த 149

கறைக்கண்டர்தென்மதுரைகாணவென்றாலாங்கோர்
தொறட்டுண்டதனையான்சொல்வேன்-பொருத்தகசம் 150

மதனாபிஷேகத்தின் சிறப்புணர்த்தல்

அஷ்டதிக்குஞ்சூழ்கோயிலாலவாய்ச்சொக்கருக்குத்
தட்டதெடுக்குந்தழியிலாள்-வட்ட......... 151

மாணிக்கமாலையெனுமங்கையொருபெண்ணடிதன்
காணிக்குத்தேடக்கருத்தாகி-ஊணைத் 152

தறைமெழுகியுண்டுதவங்கிடந்துமெந்தக்
குறைகளெனக்குறிகள்கேட்டும்-பெருவதற்குச் 153

செப்புத்தகடெழுதிச்செம்பொற்கழுத்திலிட்டும்
கெர்ப்பத்துக்காமருந்துங்கிண்டியுண்டும்-தப்பாத் 154

திருவனந்தல்சேவித்துஞ்செண்பகப்பூவாசம்
மருவனந்தநந்தனங்கள்வைத்தும்-திரையுடலை 155

வேற்றொருவர்கண்டுவிரும்பாதநாள்தாழை
காற்றடிக்கப்பூத்தகதைபோலச்-சாற்றும் 156

அரிவைதெரிவைகடந்தப்பானடக்கும்
பருவத்தேகர்ப்பம்படைத்தாள்-நரைவீழ் 157

தலையிற்கறுப்பிறங்கிச்சாய்ந்ததெனத்தொங்கு
.........யிற்கறுப்புமுதிரக்-கலக 158

விழிவேல்குழியமுகம்வெண்மதியமாக
எழின்மேனிபச்சைநரம்பெய்தத்-தழைதருஞ்சூல் 159

கொண்டவயிறுபெஞ்சைக்கூளேந்த்ரன்சத்திரத்தில்
உண்டுவருவோர்வயிற்றையொப்பாகத்-தண்டேன் 160

அளிக்குடுக்குந்தாராளரும்புளியங்காய்க்கும்
புளிக்குடிக்குமுன்னமிச்சைபூண்டாள்-களிக்கவயிற் 161

றூடுதரித்தபிள்ளைக்குள்ளாவார்வாயிலள்ளிப்
போடுவதைத்தன்வாயிற்போட்டறிந்தாள்-கூடிவந்த 162

மாதமொருபத்தாய்வயிறுளைந்துபெற்றாளவ்
வேதனையான்மூர்ச்சையாய்மெய்ச்சோர்ந்தாள்-தாதிமார்

பெண்ணென்றார்காதிற்பிழிந்தமருந்ததுபோல்
துண்ணென்றெழுந்துதுயர்தீர்ந்தாள்-வண்ணமணிப்

பொற்றொடிக்கைமங்கைநல்லாள்பொன்காய்க்கும்பூடொன்று
பெற்றதுபோலீன்றெடுத்தபெண்கொடியை-மற்றுளார்

மதனுபிஷேகத்தின் வளர்ப்புணர்த்தல்

ஏந்தியிருகையாலெடுத்துநறுநீராட்டிப்
பூந்துகிலான்மெய்துவட்டிப்போற்றினர்-வாய்ந்தசங்கிற்

சேனையுடன்வஞ்சித்திருட்டுமருட்டுமவ
தானப்புரட்டுந்தனம்பறிக்க-மானிடர்க்குச் 167

செய்யுங்கபடுமகாதித்திரிப்புமாகாசப்
பொய்யுங்கலந்துபுகட்டினாள்-செய்யபசுந் 168

தேனேகனியேதெவிட்டாததெள்ளமுதே
மானேயென்கண்மணேமரகதமே-கானீன்ற 169

பொன்னேயெனவெடுத்துப்பொற்குறங்கின்மீதேற்றி
மின்னேரிடையாள்விழிபரப்பி-நன்னுதலிற் 170

பாப்பிட்டசொல்லிவெள்ளிப்பட்டமெனவெண்ணீற்றுக்
காப்பிட்டாள்சிற்றடிக்குங்காப்பிட்டாள்-சேப்பிட்ட 171

செய்க்குவளைக்கண்மயிலேசெம்பொனுள்ளபேர்களையுன்
கைக்குள்வளையென்றுவளைகைக்கிட்டாள்-சிக்காப்புள்

ஓட்டுக்குளாவதுபோலுள்ளபணக்காரர்களுன் [வே
பொட்டுக்குளாகவென்றுபொட்டிட்டாள்-பொட்டென

வேந்தர்புதையல்வெளியாக்குமஞ்சனம்போல்
வாய்ந்தவடிவேல்விழிக்குமையிட்டாள்-காந்திமுக 174

வன்னக்கமலமதில்வண்டிருந்தாற்போலமகள்
கன்னத்தின்மீதோர்கறுப்பிட்டாள்-சொன்னதளம் 175

வீடேறப்பண்டைமுதன்மேலேறத்தன்குடும்பம்
ஈடேறப்பொற்றொட்டிலேற்றினாள்-தேடியுன்பால் 176

வாராதவாராரார்வந்துமடிச்சீலைகொட்டித்
தாராதவாராரார்தந்தணையிற்-சேராதார் 177

ஆராரார்சேர்ந்துனக்குள்ளாசைகொண்டுசுற்றாதார்
ஆராரோவென்றுதாலாட்டினாள்-தாராட்டிச் 178

சீராட்டிமுன்னிருத்திச்செங்கைகொட்டிக்காட்டிமஞ்ச
ணீராட்டியந்திநிலாக்காட்டிப்-பாரிற் 179

கிளைப்பெரியநாகேந்த்ரன்கீர்த்தியைச்சொல்வாணர்
வளர்ப்பதுபோற்பெண்ணைவளர்த்தாள்-முளைக்குமகள்

தள்ளிநடந்தாளதுக்ண்டுதாய்க்கிழவி
துள்ளிநடந்தாள்துயர்தீர்ந்தாள்-பிள்ளையொரு 181

சிற்றாடைகட்டித்தெருவில்வரக்கண்டுதிட்டி
சுற்றுமலேதிட்டிசுற்றினாள்-மற்றுமந்த 182

வம்பிமகண் மழலைவார்த்தையைக்கேட்டாடவரைத்
தம்பியென்றுசொல்லத்தலைப்பட்டாள்-அம்புயச்செங்

கைக்குவளையிட்டுக்கடகம்பவளமிட்டுத்
தக்கையிட்டகாதிற்றளப்பமிட்டுப்-பக்கத்திற் 184

கொண்டையிட்டுக்குப்பியிட டுக்கொப்பிட்டுக்காலில்வெள்ளித்
தண்டையிட்டுச்செம்பொற்சதங்கையிட்டு-வெண்டரள

மாலையிட்டிரட்டையரைஞாண் மருங்கிலிட்டு
வேலையிட்டசுட்டிநெற்றிமேலிட்டுக்-கோலச்சிந் 186

தாக்கிட்டுச்செம்பவளத்தாழ்வடங்களிட்டுவச்ர
மூக்குத்தளுக்கிட்டுமுத்தமிட்டு-நாக்குளிர 187

வாரிட்டகொங்கைமதனபிஷேகமெனப்
பேரிட்டுலகறியப்பேச்சிட்டாள்-ஆரியமும் 188

கன்னடமுங்கட்டிக்கரும்புபோலேவடுகும்
பன்னுதமிழும்படிப்பித்தாள்-மன்மதவேள் 189

பருவக்குறி தாய்கண்டமை யுணர்த்தல்

சிற்பரதவல்குற்சிறியாள்வயதேறில்
நற்பரதமெல்லாநடித்தறிந்தாள்-உற்பனமாம் 190

மோனவித்தையுள்ளமுனிவோரையுமயக்குங்
கானவித்தையெல்லாங்கரைகண்டாள்-மேனிக்குள் 191

வாடைமஞ்சள்பூசுவதும்மல்லிகைப்பூச்சூடுவதும்
ஆடவரைவீட்டுக்கழைப்பதுவும்-ஓடிப் 192

பிலுக்குவதுங்கிட்டநின்றுபேசையிலேமுத்துக்
குலுக்குவதுங்கொஞ்சுவதுங்.........தலைக்கறுப்பை 193

முந்திகொண்டுவெட்கம்போன்முடுவதுங்காமுகரை
அந்திமட்டும்வைத்துவிளையாடுவதும்-வந்தவரை 194

வாள்வீச்சுப்போலவரிவிழியால்வெட்டுவதும்
போள்வாய்ச்சிகண்டுடம்புபூரித்தாள்-வேளனையார் 195

கைக்குள்வசமாகிவந்துகாலைப்பிடிக்குமந்தச் [அ
சொக்குப்பொடிமருந்துஞ்சொல்லிவிட்டாள்-சொக்கர்பு

மண்டபத்தின்முன்னே வசந்தன் றிருநாளில்
எண்டிசையோர்மெச்சவரங்கேற்றினாள்-ஒண்டொடிக்குச்

சின்னச்சிமிழாகிச்செப்பாகித்தேங்காயாய்
வன்ன.........வளர்ந்தேறக்-கன்னிகையாள் 198

தன்னையறிந்தாள் தழியிலாள் தன்பழைய [ள்
பொன்னையொருபக்கம்புதைத்துவைத்தாள்-மன்னவர்க

சுற்றுவதுங்காமுகரைத்தோயமகட்குமனம்
பற்றுவதுங்கண்டறிந்தாள்பப்பரத்தி-பெற்றெடுத்த 200

தாய்க்கிழவி போதிப்புணர்த்தல்

மானேயென்கண்ணேமயிலேகுயிலேசெந்
தேனே மதனுபிஷேகமே-மீனீன்ற 201

குஞ்சுக்குநீச்சுங்கொடும்பாம்பின்குட்டிக்கு
நஞ்சுங்கொடுத்தவரார்நங்கையே-செஞ்சிலைக்கைச் 202

சீவகனுக்கன்றொருபெண்சிங்கமொருகன்றீனும்
பாவனைபோலேயெழுதிப்பக்கத்தில்-ஓவியமாக் 203

காரானையொன்றெழுதிக்காட்டவரிக்கன்றுதள்ளிப்
போராடிப்பாய்ந்தகதைபொய்யலவே-யாருக்கும் 204

சாதித்தொழில்தனக்குத்தானேவருமொருவர்
போதிக்கவேண்டுமோபொற்கொடியே-மாதர்க்குள் 205

உன்புத்தியென்புத்திக்கோவிரட்டியாகிலுமென்
றன்புத்தியுமகளேசற்றேகேள்-ஒன்பதூர்க் 206

கொஞ்சுபரிநகுலன்கூளேந்த்ரன்பன்றிமலை
மஞ்சட்குளியைமறவாதே-மஞ்சண் 207

மணங்காட்டியாட்பிடிக்கும்வாடைப்பொடியின்
குணங்காட்டிக்கண்காட்டிக்கோலம்-இணங்கியபொன்

னுத்தரியஞ்சற்றேயொருபாற்றெரியவிட்டுக்
குத்து.........ச்செம்பொற்குடங்காட்டி-முத்துநகை 209

காட்டிவகைகாட்டிநடைகாட்டியிடைகாட்டிநயம்
காட்டியிளையோர்க்காசைகாட்டுவாய்-கோட்டு.........210

சாய்ந்தால்முகந்திரைந்தாற்சல்லிக்காசொன்றுமுனக்
கீந்தாதரிப்பவராரேந்திழையே-ஆய்ந்தபஞ்சுப் 211
பெட்டிபோலேநரைத்தபெண்கள்கையிலென்னவருஞ்
சட்டிசுறண்டவருந்தையலே-கட்டழகின் 212
வாலிபத்தேதேட்டின்மனம்வைத்தாற்பொற்றகட்டால்
வேலையிட்டுக்கட்டலாம்வீடெல்லாம்-காலைப் 213
பிடிப்பார்முழுப்புரட்டுப்பேசியிலைகீறி
மடிப்பார்தருவார்வருவார்-படுக்கைவிதங் 214
காட்டுவேனென்பாரக்கள்ளவண்டர்தங்களையுன்
வீட்டிலழையாதேமெல்லியலே-வீட்டில்வந்து 215
பாயிற்பகட்டுவிதம்பண்ணுவார்க்குப்புழுதி
வாயிற்புகட்டுமயல்பூட்டு-நீயொருத்தர்க் 216
காசைவைத்தால்பின்னொருத்தரண்டாருடனொத்த
வேசையர்க்கெல்லாநகைப்பாமெல்லியலே....காசுபணம்
குப்பல்குப்பலாகக்குவித்தாலும்வாலிபத்தில்
வைப்பிருக்கச்சற்றுமனம்வையாதே-செப்பு 218
.........க்கசக்கிவிட்டுமுட்டாள்சரசத்
தலையவிடும்பேரையழையாதே-சிலைநுதலாய் 219
முன்பின்னறியார்முடிப்பாகப்பொன்னெழுநூற்
றெண்பதுதந்தாலுமனமொவ்வாதே-இன்பமுடன் 220
கூடுவார்நித்திரைநீகொள்வதுபார்த்துப்பொடியைப் [ச்
போடுவார்சேலைவர்க்கம்பொன்னுடைமை-சோடிணையா
சேரச்சுருட்டியப்பாற்செல்வார்விடிந்ததற்பின்
யாரைப்போய்க்கேட்பதுநாமாரணங்கே-ஊரிலே 222
தந்தைக்கீழ்ப்பிள்ளையுண்டுதாய்க்கீழ்ச்சிறுவருண்டு
வந்தால்மறையவரச்சொல்லித்-தந்தமதால் 223
வாயில்வடுச்செய்யாமல்.........ணகம்வையாமல்
தோயுமிதங்காட்டிச்சுகங்காட்டு-சேயிழையே 224
அந்திபடப்பணயமஸ்தரொக்கமாகவந்தால்
சொந்தமுள்ளபேர்தனக்குச்சொல்லியே-முந்திவந்து 225
சாரமுண்பாய்நீயவன்பின்சக்கையைத்தின்பானெனமுன்
னேரமழைத்தனுப்புநேசமாய்-தூரத் 226

திருந்துவத்துகூடிவிடுந்தேகுவார்தம்மேல்
பரிந்தாசைபோற்பிறகேபற்றிப்-பிரிந்திருக்க 227

மாட்டேனேயுன்னுலேமாப்பிளைமாராசையெல்லாம்
போட்டேனேயென்னபொடிபோட்டாய் நீ-வீட்டில் 228

தனித்திருக்கப்போமோடாசாமீயுன்றம்பல்
இனித்திருக்குந்தாடாவிருடா-சனிக்கிழமைக் 229

கப்பாலோ நீவருவாயாணையிடுமுக்காலும்
தப்பாதேயென்றனுப்புதார்குழலே-மைப்பொருங்கண்

மாது நல்லாய்வேறுமருந்தேனவர்திரும்பும்
போதுவருமேபுதையலெல்லாம்-காதல்கொண்ட 231

மன்னவரைத்தூங்குசப்ரமஞ்சத்தின்மீதிருத்திப்
பொன்னவரைக்கேளாமற்புல்லினுல்-மின்னரசே 232

ஊர்க்குஞ்சலிகைநம்மோடொத்தவர்க்குமெண்ணிக்கை
யார்க்குங்கனத்தகுடியாகலாம்-பார்க்குள்ளே 233

புல்லுவிற்றுங்கீரைவிற்றும்பொன்கொடுப்பார்காணமக்குக்
கொல்லிமலைப்பாவைக்குலதெய்வம்-பல்விழுந்த 234

கூனற்கிழவன்கொடுக்கும்பணயமதில்
நானக்குழலேநரையுண்டோ-மானமின்றி 235

அப்பன்வருவானதன்பின்மகன்வருவான்
தப்புமுறையென்றுநீதள்ளாதே-இப்பிவியில் 236

மாலைக்குடியர்வெகுமாமாயக்கள்ளர்தங்கள்
சோலிக்குப்போகாதேதோகையே-வேலையின்றித் 237

தத்தையனையாரைத்தழுவிப்பணம்பறிக்கும்
எத்தனைநாமெத்துவதுமெத்துகாண்.சித்ர 238

கதையைக்கேளென்பருவக்காலத்திலிந்தப்
பதியிலொருகுச்சிலியப்பையல்-மதுரை 239

மழுங்குணியென்னும்பேரான்மாதர்தனத்தைத்
தழுவிப்பறிப்பான்தனத்தை-முழுதும் 240

கிழக்குத்தெருவினெட்டைக்கிஷ்ணஜிவீட்டைக்
குளப்பறியாகப்பறித்தான்கூடி-மூளைத்தெழுந்த 241

செப்பு......மாதேசீவிலிபுத்தூர்தாசிக்
குப்பியுடைமையெல்லாங்கொள்ளைகொண்டான்-வைப்பென்று

தந்திரமாகப்பசப்பித்தஞ்சாவூர்ச்செல்லிதனைக்
கந்தைபொருத்தவிட்டான்கைம்மருந்தால்-இந்தவகை

ஆங்கவனுக்கேகொடுத்தாரல்லாதவன்பொருளை
வாங்கினபேரில்லையென்மேல்மாலாகி-ஈங்குவந்தான் 244

குன்று...யாய்கொழுத்தகுட்டியகப்பட்ட
தென்றுபூரித்தேனிருதோளும்-அன்றுமுதல் 245

மாட்டுப்பரங்கிக்காய்மாதேதினங்கறியாக்
கூட்டிக்கொண்டாங்கவனைக்கூடியே-வீட்டில்வந்த 246

நாலாநாளல்லினடுச்சாமஞ்சோதித்துக்
காலிற்றொடுசெருப்புக்கட்டியேமேலெல்லாம் 247

வெண்ணீறுபூசியைந்துவீரசடைபின்னிவிட்டுப்
பெண்ணீலியென்றுகண்டோர்பின்வாங்க-எண்ணமின்றிக் 248

கள்ளுஞ்சோறுங்கைச்சுரிகையுமாய்ப்போய்க்கழுவிற்
கள்ளன்வலதுகுதிக்கானரம்பில்-மெள்ள 249

விளக்கெரித்துநெய்வடித்துவீட்டில்வந்துநன்றாய்
உழக்கரிசிபெய்தூறவைத்துப்-புளிப்பில்லாச் 250

சாற்றிலிட்டும்பாற்குழம்பிற்சர்க்கரையிற்கூட்டியிட்டுஞ்
சோற்றிலிட்டுநெஞ்சைச்சுழலவிட்டு-மேற்றவனு 251

பாயத்தாற்றேடும்பணம்புற்றிலேகரடி
வாயைவைத்தாற்போலறிஞ்சிவாங்கிவிட்டேன்-பேய்போலக் 252

கையிலுள்ளதெல்லாம்போய்க்கப்பரையொன்றேந்தியதோ
தெய்வமேயென்றுதிரிகிறான்-நெய்யரிசி 253

நாளுக்குநாள்செலவாய்நங்காயுனக்குவரும்
ஆளுக்கிருக்குதின்னமாழாக்கு-வாள்விழியாய் 254

வேடிக்கையால்மாசிவீதியிலேநாமுலவ
ஆடிக்குமுன்னேயென்னாசையெனத்-தேடுநிதி 255

யுள்ளவரைமெள்ளவுபாயமாய்க்கூட்டிப்போய்க்
கொள்ளும்பவளமுத்துக்கோவைவடம்-உள்ள 256

கடையுஞ்சவுளிக்கடையும்பார்த்தையா
கிடையாய்ச்சரக்குகிடைத்த-தடைவாயென் 257

னுத்தண்டமாலையைக்காதோலையைப்பொன்மோதிரத்தை
வைத்தென்றாலுங்கடுகவாங்கித்தா-பத்தஞ்சு 258

வட்டிசுமந்தாலும்பால்வாங்கலாமென்பாயச்
சொட்டனுக்குநெஞ்சுசுறுக்கென்னும்-பொட்டெனத்தன் 259

கைத்தனத்தையீவான்கடையிலேயுள்ளசரக்
கத்தனையும்வாங்கியறையிலிடு-வைத்து 260

மருந்திடுப்பிற்கட்டிவருவார்சிலர்மேல்
இருந்துடம்பைவாட்டியெடுப்பார்-பரிந்தணைந்து 261

கைச்சரசம்போற்றடவிக்கண்டுபிடித்துடனே
பிச்சுப்பிடுங்கியெறிபெண்ணணங்கே-லச்சையற 262

மன்மதநூலைப்படித்தவம்பரையென்னுணையுன்றன்
சென்மசென்முள்ளமட்டுஞ்சேராதே-சன்யாச 263

ருத்திராக்ஷப்பூனைருபர்சிலருண்டுவந்தால்
மெத்தையிலேவைத்துவிளக்கணைத்துச்-சத்தமின்றிக்

கூடையிலேயாள்வந்துகூப்பிட்டாலையர்தமைக்
கூடையிலேமூடிவைத்துக்கூப்பிடுநீ-பாடிக் 265

கடுக்கனலைக்குங்கவிப்புலவர்வந்தால்
துடுக்காயொருவார்த்தைசொல்வார்-கொடுக்கவென்றால்

ஐந்துபொன்னும்வாங்காரரைப்பணமேபோதுமென்பார்
சிந்தையவர்மகிழச்செய்திட்டால்-நந்தம் 267

இசைபாடுவார்கூடாதென்றாற்கொடிய
வசைபாடுவார்கெடுமேவாழ்வு-அசையளவும் 268

அஞ்சுகின்றகச்சேரியாட்சேவகர்வந்தாய்
வஞ்சியவரீந்ததைநீவாங்கிக்கொள்-கொஞ்சமென 269

எண்ணுதேகைமுதல்மற்றென்னபோமோர்செம்பு
தண்ணீர்போம்நாமிடும்பொய்ச்சத்தியம்போம்-பெண்ணணங்கே 270

வாவென்றழைப்பார்மணியப்பிலுக்கர்சும்மா
போவென்றுசொன்னாலும்பொல்லாப்பு-பாவையே 271

சாதனையாய்ச்சேலையிலே தம்பலத்தின்சாறுமிழ்ந்து
சூதகமானேனென்றுதூரவிரு-மாதவிடா 272

யான நாளிற்பணயமஸ்தரொக்கங்காணிலொரு
பானைவெந்நீர்க்காகவெண்ணிப்பாராதே-நானுன்மேல்

மோகமுற்றேனீயென்மேல்மோகமில்லையென்றுசிலர்
தோகைநல்லாயுன்கருத்தைச்சோதிப்பார்-ஓகோநீர் 274

என்னமாச்சொல்லவந்தீரென்றுநைையும்மேலென்
றன்னமேயுன்றலைதொட்டாணையிடு-சொன்னவந்தப்

பொய்யாணையாற்சீவன்போகுதேபாரெனக்குத்
தையலாயவ்வாணைதயிர்ச்சாதம்-கையில் 276

இருட்டினிற்செல்லாப்பணத்தையீந்துபடுத்துக்
கருக்கலிலேபோவாரைக்காட்டித்-தரச்சொல்லு 277

வாய்மட்டாப்பேசினல்மானேமுசலின்மேல்
நாயைவிட்டாற்போலெழுப்பிநம்மைவிடு-கோயிலுக்குள்

நம்பியாரையருடனுண்டுநம்பியார்
தம்பியாரைக்கூடிச்சஞ்சரிநீ-அம்பெனுங்கண் 279

மைவிஸ்தாரக்குயிலேவாய்விஸ்தாரக்காரன்
கைவிஸ்தாரக்காரன்கையைவிடு-செய்யுமறைக் 280

கட்டளையார்வந்தாலுன்கைம்மருந்தாலேயறிவைத்
தட்டழியப்பண்ணித்தனம்பறிநீ-அட்டிலிலே 281

சோறுசமைக்குஞ்சுயம்பாகிவந்தக்கால்
வேறொருவேளாண்மைவேண்டுமோ-சாறும் 282

பருப்படியுஞ்சம்பாவும்பாற்குழம்புநெய்யும்
வரும்படிந்தகட்டளையாய்மானே-தரும்பொருளை 283

வெம்பளிக்கைபண்ணுதேவெஞ்சினப்பண்டாரிவந்தா
லும்பளிக்கையூர்வாத்தையொக்குமே-சம்பளத்தைக் 284

கூட்டிச்சுமத்திவைப்பான்கோயிற்கணக்கனொரு
வேட்டுப்போட்டுப்போகவீட்டிலழை-ஆட்டுவிக்கக் 285

கால்பிடித்தநட்டுவனார்கையைப்பிடித்தழைத்தால்
வேல்படைத்தகண்மயிலேமேவிவிடு-சால்நெடு 286

நேரஞ்செல்லாமனெடுங்குடசைக்காரனைமுன்
னேரமழைத்தனுப்புநேசமாய்ச்-சாரமுள்ள 287

நாடகத்துப்பரங்குநமக்குநடத்துவிக்கும்
பாடகனையுந்தனதுபண்ணிக்கொள்-கூடுசுத்திக் 288

காரனையுங்கைத்தாளக்காரனையுமெக்காளக்
காரனையுங்கூடியிதங்காட்டாதே-தூறு 289

தலையராய்க்கைத்தாழைத்தம்பியராய்ப்பிறற்
கலையராயுன்னழகைக்கண்டு-விலைகொடுத்தல் 290

வாங்குவாய்ச்சற்றேமருவுவான்பேய்ப்படுவான்
தூங்குவான்போவான்சுகமறியான்-பூங்குயிலே 291

மஞ்சத்தினீயுமொருமாப்பிள்ளையுமாயிருந்து
மிஞ்சுசரசத்திலொருவேற்றாள்வந்-தஞ்சாறு 292

தந்தாலவனைச்சமையல்வீட்டிற்பதுக்கிச்
செந்தேனேமெல்லச்செறுமுவேன்-வந்தணைந்து 293

கொல்லைக்குப்போனகுணம்போற்கைகாலலம்பி
மெல்லப்போநம்மையெவர்வெல்லுவார்-நல்ல 294

உடந்தையாகத்திரிந்தவுத்தியோகஸ்தர்க் [யே
கிடைஞ்சல்வந்தாலுன்னையும்வந்தேய்ப்பார்-மடந்தை

காணிக்கையானேனுன்கண்டியைத்தாதண்டைநயத்தா
மாணிக்கமாலையைத்தாவைத்துநான்-காணிக்கை 296

தீர்ந்தமறுமாதந்திருப்பித்தருவனென்பார்
ஏந்திழையேநீசற்றிணங்காதே-காந்தாரி 297

தாய்க்கிழவிசம்மதித்தாற்சம்மதமென்பாயெனது
வாய்க்குப்பயந்தவர்பின்வாய்பேசார்-நோக்கமாய் 298

என்னைக்கலந்தவர்களென்றாலுங்கைநிறையப்
பொன்னைக்கொடுத்தாற்புணர்ந்துவிடு-மின்னே 299

பறவைமிருகங்கண்முறைபார்க்குதோவேசி
முறைபார்க்கவேபிழைப்புமோசம்-சிறுபோதே 300

தேடியல்லோவன்பிற்சிலம்பியென்றுமனைவரைக்
கூடுதிருவாரூர்க்கொண்டியென்றும்-ஆடவரைத் 301

தெட்டும்பெருக்குண்டைத்திம்மியென்றங்கொண்டையிற்பூ
மட்டுண்டவொற்றியூர்வல்லியென்றும்-சிட்டர்தொழும்

பூமணமாம்பொன்னகரிப்பொன்னையாளென்றுமூர்
பூவணமாந்தென்னுறையூர்ப்பொன்னியென்றும்-தேவர்தொழும் 303

சொக்கேசர்கோயிற்றுணைக்கொடியென்றும்புவிக்குள்
மிக்கானபேர்படைத்தார்மெல்லியலே-அக்காலம் 304

வண்ணமாற்றுப்பசும்பொன் வாங்கவொருத்திசெய்த
இன்னமாற்றுக்கதையைக்கேட்டிலையோ-பெண்ணணங்கே 305

என்றிப்படித்தாயியம்பினுள்புத்தியதை
யன்றுப்படித்தாளனேகபுத்தி-அன்றுமுதல் 306

மதனபிஷேகத்தின் செய்திகூறல்

காதன்மதமீறிவருங்காமுகராம்யானைகளைக்
கோதுமுகிரங்குசத்தாற்குத்திமிதம்-ஓதியந்த 307

மாரனரண்மனைக்குள்வைத்தணைத்துச்சேர்ந்துரச
சாரக்கரும்புதனையூட்டி-மூரல்வாய்த் 308

தம்பற்கவளந்தனைக்கொடுத்துக்கும்பமுலை
கம்பத்துடன்பிடித்துக்கட்டினுள்-அம்பரத்தி 309

மூட்டுவிக்கும்யோகமுனிவோரையும்பொம்மல்
ஆட்டுவிக்குந்தோலுருப்போலாக்கினுள்-தீட்டியவேல்

வண்ணக்குடையரசர்மாநிதியாமுந்நீரை
உண்ணக்குறுமுனியையொப்பானுள்-பெண்ணுக்குத் 311

அவளது தோழிகளைக் கூறல்

தோழிமார்கைமருந்துச்சொக்கியென்றுஞ்சாராயத்
தாழியென்றுந்றாதுசவுந்தியென்றும்-ஏழுமதி 312

லேறியென்றுந்தஞ்சாவூரெத்தியென்றுமாமாயக்
காரியென்றுங்குண்டுணிவாய்க்கள்ளியென்றும்-மாருட்டக் 313

குள்ளியென்றுமாயக்குருவியென்றுமாரீசக்
கள்ளியென்றும்பத்துப்பேர்காமுகரை-மெள்ளப் 314

பொருத்துவாருடலாய்ப்போவாரைமோடி
திருத்துவார்தாராரைச்சிம்பித்-துரத்துவார் 315

கல்லிலேநாருரித்துக்காண்பார்நனைந்தவிடங்
கல்லுவார்தாமுமொருகைபார்ப்பார்-மெல்லிநல்லார் 316

அவளை விரும்பிய ஆடவர் செய்திகூறல்

இவ்வாறுசெய்யவிருநிதியந்தேடுமந்த
மைவ்வார்விழியாண்மதிநுதற்கும்-செவ்விக் 317

கொடியிடைக்குநிலவெறித்தகுறுநகைக்குமொயில்வளைத்த
பிடிநடைக்கும்வயிரமிட்டப்ரபைமிகுத்த-தொடிகளுக்கும்

அலையுதித்தவமுதெனச்சொ லருமொழிக்குமிருவிழிக்கும்
மலைகளொக்கு...களுக்குமனதுவைத்து-வலையினுக்குள்

மான்சிக்கினற்போல்மருள்வாருந்தூண்டிலிலே
மீன்சிக்கினற்போல்மெலிவாரும்-என்சிக்கிக் 320

கொண்டோமென்றுள்ளங்கொதிப்பாருங்கூடியின்பம்
கண்டோமென்றுள்ளங்களிப்பாரும்-கண்டனைய 321

பேச்சுமடந்தைக்குப்பிடிக்குமனதாசையென்று
பூச்சுமருந்திட்டனையப்போவாரும்-வாய்ச்சுதென்றே

யார்க்கும்பொடிபோடுமாயிழைமுன்வாடைமணம்
சேர்க்கும்பொடிபூசிச்செல்வாரும்-ஊர்க்கிணங்கத் 323

தந்தனத்தையீந்துசரிந்ததனக்காரிபண்ணுந்
தந்தனத்துக்குள்ளாய்த்தளர்வாரும்-தந்திரமாய் 324

மாதைப்பசப்பவென்றுவாசல்மட்டும்வந்துநரைப்
பூதத்தைக்கண்டகலப்போவாரும்-கோதாயுன் 325

கால்பிடிக்கவோவடைப்பைகட்டவோசண்பகப்பூ
மேல்பிடிக்கவோவிசிறிவீசவோ-கோலமலர் 326

கட்டவோகட்டழகிகண்ணுறங்கப்பொற்குறங்கு
தட்டவோவென்றருகிற்சார்வாரும்-வெட்டிவேர் 327

மண்டுகுழலாள்குளித்தவாடைமஞ்சணீரையள்ளிக்
கொண்டுதலைமேற்றெளித்துக்கொள்வாரும்-அண்டர்பிரான் 328

சன்னிதியிற்சந்தடியிற்றள்ளுண்டுவீழ்வார்போற்
பின்னுகுழலாளைப்பிடிப்பாரும்-பின்னொருத்தன் 329

வீட்டிலிருக்கவெளியிலே நின்றுசன்னை
காட்டித்திரிந்துகரைவாரும்-வீட்டிறப்பை 330

அண்டிக்......செய்யுமாரம்பங்கேட்டுவெட்டித்
துண்டித்தாற்போலத்துடிப்பாரும்-கண்டனையாள் 331

சோதிமுகமஞ்சள்துவண்டதுகிற்போர்வையுடன்
வீதிதோறும்போய்ப்பிலுக்கிமீள்வாரும்-காதளவு 332

மைப்பட்டகண்ணிசப்ரமஞ்சத்தின்மேற்காலைத்
துப்பட்டிகொண்டுதுடைப்பாரும்-செப்பமுள்ள 333

தெப்பத்திருநாளிற்றெப்பக்குளத்துமங்கை
தெப்பத்தேயேறிவருஞ்சீராட்டில்-அப்பம் 334

வடைசுகியன்றோசைவகைகள்பணியாரம்
கடையிலேகொண்டுமடிகட்டிச்-சடுதியிற்போய் 335

நாரிகையிலேகொடுக்கநாடிவடமோடுமாழ்
வாரியிலேயோடிவருவாரும்-பேராம் 336

வசந்தன்றிருநாளின்மண்டபத்தின்மங்கை
இசைந்துநடம்புரியுமெல்லை-கசங்காமல் 337

மல்லிகைப்பூச்செண்டுமருக்கொண்டுசந்தடியை
மெல்லவிலக்கிவரும்வேளையிலே-நல்லபட்டைக் 338

கம்பாலடிபட்டகஸ்தியினொந்துடம்பு
செம்பாலொழுகத்திரிவாரும்-தம்பிரான் 339

பல்லக்குக்கூடிப்பதினாறுநாழிகைமேல்
வல்லொக்குங்கொங்கைவளவுக்குச்-செல்லுகையிற் 340

குக்கல்வாய்காட்டிக்கொடுக்கத்தலையாரி
கைக்குளகப்பட்டுக்கட்டுண்டு-கக்குரத்தம் 341

மூக்கிட்டொழுகமுழங்கையிடிபட்டுநெஞ்சிற்
சீக்கட்டிக்கொண்டுதிரிவாரும்-தூக்குமஞ்சத் 342

தேயொருவன்வீட்டிலிருக்கவதுகாணாமற்
போயொருவன்வீட்டிற்புகுதவே-ந்பாயமற்ற 343

பூசல்விளைத்துப்பொருமையினாலேவாது
பேசிவெளியிற்புறப்பட்டு-ரோசமுடன் 344

மாதொருத்திக்காப்பொருதவாலியுஞ்சுக்ரீவனும்போல்
வீதியிலேமற்கட்டிவீழ்வாரும்-சாதிரைத்தீ 345

வட்டிவெளிச்சமினுமினெனவந்தியர்முன்
கட்டியங்கள்கூறக்கடுநடையாய்த்-தொட்ட வரும் 346

பாதக்குறட்டிற்பவளக்குமிழிலங்க
மாதுமணவறைக்குள்மன்னர்வரும்-போதிலந்த 347

வீட்டிற்பரணேறிமேவுந்தொழிலமளி
கேட்டுப்பதுங்கிக்கிடப்பாரும்-பாட்டிளஞ்சொன் 348

மாங்குயிலைப்போலமருவக்கனவுகண்டு
தூங்கையிலே............சோர்வாரும்-ஈங்கிவளுக் 349

கீயவகைகாணாமிரதம்பொன்னாக்குவது
பாயமென்றுமித்ரம்பலகூட்டித்-தீயிற் 350

குகையிலேவைத்துக்குனிந்தூதிவாதப்
புகையிலடிப்பட்டுப்புகைந்து-திகைதெரியா 351

மாலைக்கண்ணாகிமதிமயங்கித்தங்கள்தங்கள்
காலைக்கண்ணாக்கிவழிகாண்பாரும்-வாலிபத்தில் 352

பூணார்............யாட்காப்பொன்திருடிக்கையிரண்டும்
சாணாகக்கண்டுதளர்வாரும்-வாணுதற்காத் 353

தாங்கன்னமிட்டுத்தலையைக்கடைக்காசு
வாங்கென்னவிட்டுடலைமாய்ப்பாரும்-தூங்கிவிழும் 354

வண்ணாரைமயிரும்மாதவிடாய்த்தம்பலமும் [ம்
பெண்ணாய்த்தலையோடும் பிள்ளையொன்றும்-சுண்ணாம்பு

பாளைபோலேநரைத்தபாவிபடுக்கைத்தலத்திற்
பூனைபோற்றேண்டிப்புதைப்பாரும்-மானனையாள் 356

இட்டமருந்தாலிருமல்பிடித்தோயாமற்
குட்டியிட்டநாய்போற்குரைப்பாரும்-ஒட்டியபுண் 357

என்பவர்க்குநாணியிரசந்தின்றின்கரும்பு
தின்பவர்க்குநாணித்திரிவாரும்-பொன்சரிகைச் 358

சேலைகொடுத்ததற்குச்சீமாட்டியென்கொடுத்தாள்
சூலைகொடுத்தாளென்றுசொல்வாரும்-மூலவரை 359

யாப்புக்குச்சத்திரமிட்டாவிக்காக்கக்காக்காய்த்
தோப்பிற்கிடந்துதுடிப்பாரும்-மாப்பிளைமார் 360

வைத்த..*.........மங்கை............யிற்கண்
டெய்த்துநெடுமூச்செறிவாரும்-முத்துமுத்தாய்ப் 361

பேசினாலும்போதும்பேதைநமைத்தூஷணமா
ஏசினாலும்போதுமென்பாரும்-பாசிழையாள் 362

கொந்தலரும்பூவணைமேற்கும்பகர்ணலீலைசெய
இந்திரன்போற்பக்கத்திருப்பாரும்-ஐந்துபத்து 363

மாடுவிற்றோநூறுமறிவிற்றோமேழுமந்தை
ஆடுவிற்றோம்வீட்டிலடிமைவிற்றோம்-தேடறிய 364

வெண்கலத்தாற்குத்துவிளக்குவிற்றோங்காணிவிற்றோம்
உண்கலத்தைவிற்றோமுடைமைவிற்றோம்-பெண்செலவுக் 365

கென்னத்தைகேட்கவந்தாலென்னத்தைநாங்கொடுப்போ
என்னத்தைச்சொல்லுவோமென்பாரும்-முன்னமிந்த [ம்

மின்னாசைகொள்ளாமல்வீணுக்குக்கொண்டோமிச்
சன்னாசமென்றுதளர்வாரும்-என்னசெய்வோம் 367

பங்கைவிற்றுமீந்தோம்பணமினுந்தாபோவென்றாள்
எங்கேசுமையெடுப்போமென்பாரும்-கங்குலுக்கு 368

திக்கிலோனாகாசுசெல்லேனாபோங்குலுநாம்
இத்தனையுந்தோற்றிழந்தோமென்பாரும்-அத்தையார்

சூளைமகளுநன்னுசொர்ணவெல்லாதக்கொண்டு
நாளையென்றாளென்றுமனைநைவாரும்-நாளிலே 370

பாண்டிநாட்டிச்சிபணமுறிஞ்சினாள்நாங்கள்
ஆண்டியானோமென்றலைவாரும்-ஆண்டியர்தம் 371

தொண்டுபோய்வேடம்போய்த்தோகைக்குடையவரைக்
கொண்டுபோய்க்கையிற்கொடுப்பாரும்-கண்டசெட்டு 372

மோசமாச்சக்காண்முதலுக்குப்புல்வாண்டைக்
காசுமில்லையென்றுகரைவாரும்-வேசியிவட் 373

கீந்தபொருளைவட்டிக்கீந்தோமோநாமிருக்க
வாய்ந்தமச்சுவீடுகட்டிவைத்தோமோ-கூந்தலிளம் 374

பேடைமயில்போல்வீட்டுப்பெண்டாட்டிக்கேயுடைமை
சோடிணையாப்பூட்டிச்சுகித்தோமோ-ஆடுகொண்டு 375

விட்டோமோமாடுகொண்டுவிட்டோமோதெய்வத்துக் [ம்
கிட்டோமோதேகியென்பார்க்கீந்தோமோ-அஷ்டதிக்கு

நாடிப்புகழ்பெரியநாகமன்மேற்பாமாலை
சூடித்தியாகஞ்சொரிந்தோமோ-தேடுநிதி 377

தன்னைக்கொடுத்துத்தரித்திரத்தைவாங்கினோம்
என்னவியாபாரமென்பாரும்-இன்னவகை 378

காமுகரெல்லாமயங்கக்காளத்தியையன்மகன்
ஆமொருவனிவ்வூரானாதியையன்-சேம 379

மதுரைக்கொருநாள்போய்மாசித்தெருவில்
வ்திவசத்தாற்கண்டானம்மின்னை-மதிநுதலாள் 380

மையலுக்குள்வீழ்ந்தான்வடுச்செய்தமாமரத்தில்
மெய்யுரிஞ்சப்போய்க்கவரிவீழ்ந்தாற்போற்-கையில் 381

இருந்ததெல்லாம்வீட்டிலிருந்ததெல்லாமாஸ்தி
இருந்ததெல்லாந்தோற்றானிரந்தான்-மருந்தினாற் 382

கள்ளுண்டார்போலக்கலங்கினான்வாசலிலே [ன்
தள்ளுண்டான்றன்னொழுக்கந்தப்பினான்-விள்ளுவதே

ஆதியையனென்னும்பேரன்றேபோயிப்பால்வி
யாதியையனென்னும்பேராயினான்-பாதி 384

யுடலாகியொட்டியபுண்ணுள்ளுருக்கயார்க்கும்
தொடலாகாச்சீழ்ச்சிரங்கு சூலை-கொடிய 385

அரையாப்புமேகவெட்டையண்டத்துவாதம்
புரைவாய்ப்பவுத்ரம்புகைச்சல்-இருமல் 386

இளைப்புப்பொடுகுமருந்திட்டநோய்பித்தம்
களைப்புமாய்ப்பூனைபோற்கத்திக்-கிழக்கே 387

அடுத்தமனையிலருகுதிண்ணைதன்னிற்
படுத்துக்கிடக்கிறான்பாரும்-படித்தவரே 388

இப்படியாத்தேடியுண்ணுமேந்திழையாள்வாழ்மதுரைக்
கெப்படிப்போவீர்வருவதெப்படிக்காண்-செப்புமவ 389

தானியையரேயென்றுதக்கபுத்திபோதிக்க
ஞானியையரைப்பார்த்துநான்விரத்தி-யானேன் 390

அவதானி மதுரைக்கேகினமை கூறல்

இருப்புத்தூணிற்கரையானேறுமோபோம்போம்
நெருப்பிற்புழுவிழுமோ நீரென்-கருத்தை 391
அறிவீரென்றேனல்லதையரேயென்று
பிரியாமல்வந்தாரென்பின்னே-நெறியினிற்போய் 392
வையகமேலெய்தியசீர்வைதிகநூன்மொய்யொலிசேர்
மொய்திரை நீர்வையையில்யான்மூழ்கியே-உய்யப் 393
படியுமடியவர்கொடியபடிறுசெயுமிடர்முழுதும்
அடருமெழுகடலினிடையாடிக்-கிடையாப் 394
பரத்துக்கேவிருப்புற்றோர்பவத்துக்கோர்நெருப்பொப்
அருட்பொற்றாமரைக்குட்போயாடிஉருச்செபிக்கும்[பாம்
ஐந்தெழுத்தைச்சிந்தைவைத்திட்டன்பருக்குஞ்சலத்தைச்
சிந்துசித்திக்குஞ்சாத்தைத்தெண்டனிட்டுக்-கந்தபுஷ்பக்
கற்பகமெனப்பொலிகடப்பநிலவிற்குலவும்
அற்புதகற்கணமையைத்தொழுது-சிற்பரத்தில் 397
நேசர்மனவாசர்பவநாசகயிலாசர்சக
தீசர்மதுரேசரடியான்போற்றி-நேசமுடன் 398
துங்கப்பிரகாரத்தைச்சுற்றிவடகுடபாற்
சங்கப்புலவர்தமையேத்தி-எங்குமுள்ள 399
தீயமாபாதகமுந்தீரத்தீர்த்தம்பருகி
நாயகர்பொற்கோபுரத்தைநானீங்கி-ஆயிரக்கால் 400

மதனாபிஷேகத்தைக்கண்டு மருண்டமை கூறல்

மண்டபத்திற்கண்டேன்மதனாபிஷேகத்தை
விண்டலத்தைவிட்டுவந்தமேனகையைக்-கொண்டைச்
சொருக்கழகுமுத்துத்துராயழகுஞ்செவ்வாய்
முருக்கழகுஞ்சேலைமுகப்பிற்-கருக்கழகும் 402
வேலழகுபோன்றவிழியழகுந்தண்டையிட்ட
காலழகும்பொற்கடகக்கையழகும்-ஓலையிட்ட 403

காதழகும்வச்ரமணிக்கச்சிறுக்குமார்பழகும்
சோதிமுகத்தழகுந்துங்கரத்ந-மாதுரதி 404

கட்டழகும்பொட்டழகுங்கச்சைகட்டிவந்தகட்டு
மட்டழகுங்கண்டுமயங்கினேன்-கிட்டவந்த 405

நாட்டத்தைகண்டுநடந்துசிலைக்காமனும்பூந்
தோட்டத்தைக்கொள்ளைகொண்டுதோன்றினான்-வாட்டுமதன் 406

கையம்புபாயவஞ்சிக்கண்ணம்புபாயநின்று
தொய்யுமான்போலத்துவக்குண்டேன்-தெய்வசுதி 407

காணுமிசைராகங்கைத்தாளமத்தளங்கை
வீணைபலகைதித்திவேணுசுரம்-கோணுமற் 408

கூடுஞ்சுருதியுடன்கொம்பனையாள்சங்கீதம்
பாடுஞ்சுருதியின்பம்பாலிக்க-ஆடவரை 409

எய்யுமதவேள்கைக்கிசையுமலர்வாள்போல்
தையலாள்புஷ்பாஞ்சலிசெய்தாள்-செய்துபிள்ளை 410

யார்கவுத்துவங்கொண்டளாடவிளையநயி
னார்கவுத்துவங்கொண்டுநண்ணினேன்-சேரும் 411

நிலைக்கிடைகொண்டாள்மருட்டுநீலமலர்ச்செங்கண்
வலைக்கிடைகொண்டாளென்மனத்தைக்-கலைப்பரத 412

முந்தோரெடுப்பெடுத்தாள்மூரிவில்லைப்பூட்டியென்மேல்
வந்தோரெடுப்பெடுத்தான்மதவேள்-நந்திசொன்ன

சொற்கட்டிலாரிதொடுத்தாள்முன்னின்றவரை
மற்கட்டுவாள்போல்மறையநின்றேன்-பொற்கடகக் 414

கைச்சலாங்கொண்டாள்கனம்பேசலாமிதற்கே
மெச்சலாமென்றுரைத்தார்விஞ்சையோர்-மெச்சுந் 415

தருக்கண்டாள்மற்றோர்சதிகொண்டாள்கண்டே
மருட்கொண்டிருக்கவெனைவைத்தாள்-விரித்தசுருள் 416

பாதிமடித்தாள்கீதம்பாடினாள்பூப்போட்டு
வாதினடித்தாருமயங்கினார்-சூது......... 417

மாதுபிரபந்தம்வகுத்தாளிதற்குரைப்ப
தேதுபிரபந்தமெனவெண்ணினேன்-நாதப் 418

பதசாரிகொள்ளப்பார்வேந்தரீந்தார்
முதுசாளிகைப்பொன்முடிப்பை-எதிராக 419

நின்றவினயங்கள்செய்தாள்நிஷ்டூரியென்மனது
கன்றவினயங்கள்செய்தாள்கண்ணாலே மன்றிலொரு 420

கோப்பெடுத்தாள்வேந்தர்பொன்னைக் கொள்ளைகொள்ளக்கள்ளியிந்த
கொப்பெடுத்தாளென்றாரென்கூடவந்தோர்-காப்பான

தாரணிகொண்டாள்வோர்தடமகுடங்கம்பிக்கப் [கு
பேரணிகொண்டாளாசைப்பேய்கொண்டேன்-ஆரணங்

சக்கணிநின்றாடச்சபையிலேயோடியந்த
மைக்கணியைமுத்தாடவாஞ்சித்தேன்-இக்கணையாள் 423

செயிலாகுவித்தையினாற்செம்பொனுடனோமெனவேன்
கைலாகினேந்தக்கருத்தானேன்-மைவாளும் 424

கைவாளுமென்னைவெட்டக்கள்ளியொருகூத்துவிதம்
செய்தாளம்மான்வலையிற்சிக்கினேன்-தொய்யாமல் 425

தேசிகத்திலோர்நடனஞ்செய்தாள்கடையிலுள்ள
கோசிகப்பொன்னாடையெல்லாங்கொள்ளைகொண்டாள்-பேசும 426

நயமங்களப்பெண்ணடம்பூலசெய்தாள்
செயமங்களம்பாடித்தீர்ந்தாள்-மயல்கொண்ட 427

பேதையேன்றன்மனதும்பெண்களும்பின்னேதொடர
மாதுமனைக்கேகவழிகொண்டாள்-காதில்விசைப் 428

பந்தடிபோற்றுள்ளிப்பரதவித்தேன்பாங்கனையச்
சந்தடியிற்கையைவிட்டுத்தப்பினேன்-மந்த்ரசெப 429

சுற்றமெனுந்தளையுந்தோழனெனும்பாகனையும்
புத்தியெனுமங்குசமும்போக்கியே-மத்தமிஞ்சப் 430

பெண்ணானையைத்தொடரும்பேரானையேபோலப்
பண்ணார்மொழியாள்பின்பற்றினேன்-வண்ணமலர்க் 431

காலிலிட்டதண்டைகலின்கலினென்றோலமிட
மேலிலிட்டபூஷணப்பொன்மின்னெரிப்ப-வாலிபர்கண்

டண்ணாந்தகொங்கைக்கறிவைக்கொடுத்திலையிற்
சுண்ணாம்பிடாமற்சுருட்டியுண்ணக்-கண்ணிரண்டும் 433

மங்கைமேலாகவருவாரும்போவாரும்
தங்களிலேதங்கள்தலைமோத-துங்கமத 434

அத்தியின்மேற்செல்லுமாசரிவள்கொங்கைகளும்
மத்தகமுநோக்கிமதிமருளத்-தத்துபரி 435

கான்மீறினாற்போற்கலினநெகிழவிட்டு
மான்மீறிநேரெதிரேமாறிவிட-வேல்விழியாள் 436

சந்தனகும்பஸ்தனங்கள்சுமந்திடை
நைந்தனமென்றுநடுங்கநடந்திவள்-வந்துதன் 437

பொன்முகப்புமாளிகையிற்போய்ப்புகுந்தாணின்றேனுன்
முன்முகப்புவாயிலிலோர்மங்கைபோல்-என்முனொரு

செக்குவருவதுபோல்சீமாட்டிகைமருந்துச்
சொக்கியென்னும்பாங்கிவந்துதோன்றினாள்-மைக்குழலாள் 439

பாங்கிகள் சந்துசெய்தமை கூறல்

ஆரென்றாளுங்களூர்யாதென்றாளே துங்கள்
பேரென்றாளண்டியண்டிப்பேசிட்டாள்-காரிகையே 440

சீரங்கமெங்கள்பதிசிங்கையரென்தோப்பனார்
சாரங்கபாணியையர்தம்பிநான்-நாரணையர் 441

சுப்பையரென்மாமனார்சோமாசிப்பட்டர்பெறும்
அப்பையங்கார்தாமெங்களத்தம்பி-செப்புகவி 442

அஷ்டாவதானியென்பேராயிழையேயென்மனைவி
மட்டார்குழலிமனவெறுப்பால்-விட்டேகி 443

நாடிவந்தேனுங்கள்பதிநம்பர்சொக்கலிங்கர்முன்னின்
றாடிவந்தபெண்ணரசியாரென்றேன்-ஆடவரே 444

மாணிக்கமாலைபெற்றவச்சிரத்தைக்கும்பகுடக்
காணிக்குவாய்த்தகனதனத்தை-ஆணிமுத்தை 445

விண்ணிச்சைகொள்ளவந்தமேனகையைப்பெண்ணுக்கு
பெண்ணிச்சைகொள்ளவந்தபெண்ணமுதை-எண்ணரிய 446

சாஸ்த்ரவிதகொக்கோகசாரத்தைமேல்விருது
பாத்திரசிரோமணியைப்பைங்கிளியை-வாய்த்தமட 447

மானைமரகதத்தைமன்மதகுடோரியைச்செந்
தேனைமதனபிஷேகத்தை-நானிலத்தோர் 448

எல்லாமறிந்திருக்கயாமறியோமென்றவிதம்
சொல்லீரென்முள்மயலைத்தூண்டினள்-மெல்லிநல்லாய்

இன்றைக்கெவர்வருவாரேந்திழைக்கென்றேனந்தக்
குன்றைப்பொருதனக்கொம்பனையாள் அன்றதற்குப்450

பட்டணத்துப்பாரபத்யம்பாஸ்கரையனேகோட்டைக்
கட்டளையானேபாயக்கட்டுபல-பட்டடையிற் 451

சோலையப்பப்பிள்ளையோசுற்றுதடைகட்டு
மாலையப்பப்பிள்ளையோவாசல்வழிச்-சாலையஞ்சற் 452

காரமணியங்கனகசபாபதியோ
பாரணிலாயம்மணியம்பங்காருே-சீரணவு 453

ஆனைமணியமரசப்பனேதர்ம
தானமணியஞ்சதாசிவனே-மேன்மைதரும் 454

கோயிற்றுரைமணியங்கும்பலிங்கப்பிள்ளையோ
ஆயத்துறைமணியமாண்டியோ-ஓய்வறுகா 455

மோட்டமணியமுருக்கப்பனேகீரைத்
தோட்டமணியநெட்டைச்சொக்கனே-மாட்டுவரிக் 456

காரனேபாசிவரிக்காரனேபீரங்கிக்
காரனேபொற்கொடிமேற்காதலொடும்-ஓரிரவில் 457

எத்தனையோபேரிங்கேயெத்தனையோபொன்கொடுவந்
தெத்தனையோசொல்வார்களெத்துக்கள்-உத்தமிதான்458

அங்கவரிலேயொருவர்க்காணூலும்வாய்நேராள்
சிங்கஞ்சிறுதேரைதின்னுமோ-உங்களைப்போல் 459

நற்குணமுள்ளார்தமையே நாடுவாள்வேந்தர்தரும் [மை
பொற்குவைக்குமுள்ளம்பொருந்தாள்காண்-சொற்புல

வீறுடையராகிநல்வேதியரேயென்றசில
கூறியதன்பின்னேயக்கோதையங்கே-தூறுதலைத் 461

தூறுசவுந்திக்குச்சொன்னாள்பயிலாக
ஏதுக்கழைத்தீரெனவந்தாள்-மாதுக்கின் 462

ரூர்வருவார்சொல்லென்றேனாருமில்லைபொன்கொடுத்து
நீர்வருவீராகிலிங்கே நிற்பானேன்-வாருமென்றாள் 463

முத்தனையமுத்துநகைமோகவல்லிக்குப்பணயம்
எத்தனைபொன்சொலென்றியம்பினேன்-அத்தைக்கு

முன்னூறுபொன்மகட்குமுந்நூறுபொன்னெனக்குப்
பின்னூறுபொன்றோழிப்பெண்களுக்குச்-சொன்ன 465

தொருநூறுபொன்னுமொருமுடிப்பாய்த்தந்து
வருவீரேல்வாருமென்றாள்மங்கை-துரைமதுரை 466

வெள்ளைப்புதுவெட்டுமின்னலாயப்படியே
அள்ளிக்கொடுத்தங்கனுப்பினேன்-உள்ளிருந்து 467

ஏவற்பெண்களுபசரித்தமை கூறல்

பைந்தாரணிகூந்தற்பைங்கனிவாய்ப்பெண்கள்சிலர்
வந்தார்தொழுதார்வரச்சொன்னார்-சந்தனத்தி 468

கைவிளக்குக்கொண்டுவந்தாள்கால்விளக்கநல்லதண்ணீ
தெய்விகொண்டுவந்தாள்பொற்செம்பிலே-மைவிழியாள்[ர்

அங்கிபிடித்தாளடைப்பைவரிசைசின்னத்
தங்கிபிடித்தாள்தனிப்படிக்கம்-செங்கலவை 470

பூசினாள்பூசிவந்துபூமுடித்தாள்பூவின்மெல்ல
வீசினாள்பொன்கவரிவெண்கவரி-ராசி 471

கைலாகுதந்தாளென்காளேகுமென்று
வெயிலாள்பாவாடைவிரித்தாள்-ஒயிலர்க 472

மனைக்குட்சென்றிருந்தமை கூறல்

பம்புபெருபோனுட்பகட்டறியாப்பாய்புலிபோல்
அம்பொனெடுமனைக்குள்யான்சென்றேன்-செம்பவளப்

போதிகைக்காலேந்துசிங்கப்பொங்கத்தங்கச்சவுக்கை
மீதுரத்நகம்பளவிசாலத்தில்-மோதுகரிக் 474

கோட்டாரக்கொங்கையார்கொண்டுவந்துதிண்டருகு
போட்டார்துரைப்பாங்குபோலிருந்தேன்-வாட்டடங்கண்

மதனாபிஷேகம்கண்டு உபசரித்தமைகூறல்

வட்டமிட்டகொங்கைமதனாபிஷேகமுநான்
கட்டிவிட்டபொன்முடிப்பைக்கைக்கொண்டு-இஷ்டத்

தருக்குடையேன்றன்னைவந்துசந்திக்கரண்டு
பருக்குமெலுமிச்சம்பழங்கள்-மருக்கொழுந்துச் 478

செண்டுகொண்டுதன்னிடத்திற்சென்றிருந்தவென்மனதும்
கொண்டுகொண்டுவந்துநின்றுகும்பிட்டாள்-ஒண்டொடியாள் 479

காதலரைச்சேர்ந்தறியாக்கன்னிபோற்சூதறியாப்
பேதைபோற்கூசிமெள்ளப்பேசினாள்-மாதவரே 480

மண்டபத்திலாடினேன்வந்துநின்றீரும்மைநான்
கண்டுமயலாகியென்பக்கத்துளவோர்-ஒண்டொடியை

மெள்ளப்போய்க்கூட்டிவாவீட்டிலென்றேன்மாரீசக்
கள்ளிகுழப்பிக்கழப்பிவிட்டாள்-தெள்ளுதமிழ்ப் 482

பாட்டிலேவல்லீரென்பங்கிற்குலதெய்வம்
வீட்டிலுமைக்கூட்டிவந்துவிட்டதே-வீட்டில்வரத் 483

தாங்கலேன்வாசற்றலைக்கடையினிற்பானேன்
பாங்கியேன்வந்தாற்பணயமேன்-நீங்கணல்ல 484

பூவைக்கண்டேமுடித்துப்போவோமென்றெண்ணினீர்
மேவிக்கொண்டானுன்விடமாட்டேன்-தேவரீர் 485

சித்தமெங்கள்பாக்யமென்றுசெப்பினாள்சாலவித்தை
யத்தனையுமெய்யென்றேயானிருந்தேன்-கைத்தலத்தால்

மின்னிருக்குநுண்ணிடையாள்மென்கமலக்கைப்பிடித்து
முன்னிருத்திக்கொண்டுமுகம்பார்த்தேன்-கின்னரத்தைக்

கூட்டினாளேந்துதனக்கோட்டினாள்தந்திரியை
மீட்டினாள்சங்கீதவெல்லச்சா-றூட்டினாள் 488

சொக்கேசர்மேற்கவியுஞ்சொக்கேசர்தம்பாதி
மிக்கானவங்கயற்கண்மேற்கவியும்-தக்கபுகழ்ப் 489

பாண்டித்துரைமீதிற்பாட்டும்படித்ததற்பின்
ஆண்டநிலைக்கோட்டையதிபன்மேல்-தூண்டுபுகழ்ச்

சிங்காசனாதிபதிசிந்தமகூளேந்த்ரனருள்
எங்கோன்பெரியநாகேந்திரன்மேல்-மங்கை 491

பதம்படித்தாள்வண்ணம்படித்தாளென்காதுக்
கிதம்படைக்குந்தேன்போலினிக்க-விதம்படைக்கும் 492

முற்கட்டும்பாகமுஞ்சீர்மோனைகளும்பொருளும்
பிற்கட்டுமுன்முரணும்பின்முரணும்-நற்கட்டாம் 493

சொற்கட்டுங்கண்டுவிலைதொண்ணூறுபொன்பெறுமோர்
கற்கட்டுமோதிரத்தைக்கையிலிட்டேன்-விற்பிடித்து 494

தாய்க்கிழவிகண்டு உபசரித்ததை கூறல்

வாங்கினாற்போல்வளைந்தவறட்டுடலும்
தாங்கிவைத்தகாலுந்தடிக்கொம்பும்-தேங்காய்க் 495

குடுக்கைபோல்வாயுங்கொடுவாயுஞ்சற்றே
நடுக்குந்தலையுநரையும்-பொடிக்கொசுகு 496

மொய்த்தகண்ணுங்காற்றூட்டிமுன்பறியப்பின்பறியக்
குத்திருமல்போட்டலைக்குங்கோப்புமாய்-வித்துக்கு 497

விட்டசுரைக்காய்போல்விழுந்துமுழங்காலதனைத்
தொட்ட......த்தாய்க்கிழவிதோன்றினாள்-கிட்டவர 498

நாணமுற்றாள்மாமியென்றுநானறியத்தன்னுடம்புக்
கோணலுக்குள்ளேசற்றேகோணினாள்-தூணொதுங்கி

வந்தீரோவெங்கள்வரிசைத்துரையேநீர்
சந்தோஷமாகவிங்கேதான்வரவே-இந்தமனை 500

என்னதவஞ்செய்ததோவென்பேதைமுன்பிறப்பில்
என்னதவஞ்செய்திருந்தாளோ-கன்னிமுந்தா 501

நாளிரவுகண்டகனாநன்மையுமென்பேதைமணித்
தோளிடதுபக்கந்துடித்ததுவும்-ஆள்வரத்தில் 502

காகங்கதறியதுங்கட்டைச்சிதும்மியதும்
தோகைக்கொருகுறத்திசொன்னதுவும்-யோகம்வரப்

பல்லிநிமித்தம்பலகாலியம்பியதும் [தேன்
நல்லவரைச்சேர்க்குமென்றுநங்கையுடன்சொல்லிவைத்

அப்படியேவந்தீரென்ஞைசமகள்குணத்தை
இப்படியென்றேயறியீரின்னமுநீர்-பொய்ப்புரட்டுச் 505

சாலவித்தைப்பெண்கள்தடத்தின்மிதித்தறியாள்
மாலவித்தைப்பெண்கள்மனைக்கேகாள்-நாலு 506

பரத்தையரைப்போலேபணங்காசுதேடுங்
கருத்துண்டோகாயக்கங்காணேன்-ஒருத்தர்கிட்ட 507

மாஞளைவிட்டேஞேமாயக்கிரந்திவந்து
தாஞெலொருகாசுக்காகுமோ-நானீன்ற

மாதுக்குராசவளர்ச்சியேயல்லாமல்
ஏதுமறியாளின்னங்காண்-பேதைக்குக் 509

கொஞ்சவயதாஞலுங்கூடியுமைக்கலந்து
கொஞ்சவயதுகாண்கொற்றவரே-வஞ்சிநல்லாள் 510

தன்மனதுக்கேற்கச்சவதரித்தாற்பொன்கோடி
மன்மதன்தந்தாலுமினிவாங்காள்காண்-என்மகட்குப்

பாலிலேமெள்ளப்பழநழுவிவீழ்ந்தவிதம்
போலவந்துவாய்த்தீர்புலவரே-நீலியொரு 512

பேய்ப்பிள்ளையைப்பெற்றேன்பிடிப்புவிடாமற்கொண்ட
மாப்பிள்ளையும்பெண்ணுமாய்வாழ்ந்திருங்கள்மாப்பிள்ளைக்கு

நித்திரைக்குமெத்தநெடுநேரமாகுதுபோ
தத்தைமொழியாயென்றுசன்னைசொல்லி-அத்தையரும்

போயிஞர்பாங்கியரும்போயிஞர்செம்பவள
வாயிஞளுள்வீட்டில்வாருமென்ருள்-சேயிழையாள் 515

பள்ளியறைச் சிறப்புக்கூறல்

முன்சென்ருள்பின்சென்றேன்முன்முகப்புவாசலிலோர்
பொன்கொண்டிழைத்தரத்நபோதிகையோ-மின்கொண்

சித்திரக்கொடுங்கையோசெம்பொனிலையோகதவிற் [ட
பத்தியிட்டகண்ணுடிபட்டமோ-கத்திரிப்பு 517

வேலைநிரைத்தபுதுமேற்கட்டியோசுகந்த
மாலைநிரைத்தவரிசையோ-கோலவச்ரக் 518

காலிட்ட தூங்குமஞ்சக்காந்தியோபட்டாடை
மேலிட்டமல்லிகைப்பூமெத்தையோ-வெல்லைகண்டு 519

தாங்கியதீவட்டிக்குத்தானேதயிலம்விடப்
பாங்கில்வைத்தசூத்திரப்பொற்பாவையோ-தூங்குமஞ்ச

பக்கத்தில்வெள்ளிப்படிக்கமோபள்ளியறைத் [ப்
திக்குக்குத்திக்குவதிற்சித்திரத்தில்-மைக்கருங்கட் 521

பெண்ணிரதிபோலாறுபேர்க்கொருவனேலீலை
பண்ணவெழுதிவைத்தபாவனையோ-தண்ணளியோன்

மேற்கொண்டொருமடந்தைமூக்காமுபரிசெயக்
கார்க்கொண்டைபின்சரியக்.........போர்க்கலவி 523

யாட்டத்திற்சூதகமுமாகவெழுதிக்கழுவிற்
போட்டவிதம்போலிருந்தபொங்கமோ-வாட்டமுற 524

மோடிவைத்தபெண்கமலமுன்கையிடித்துக்கடைக்கண்
நாடிவைத்தாளென்றுநயம்பேசச்-சூடகக்கை 525

தன்னைக்குவித்துத்தலைவன்றலையிலந்த [ல்
மின்னனையாள்தாடனஞ்செய்விந்தையோ-பின்னொருபா

அம்பனையகண்ணியுமோராளுந்தலைமாறிச்
.........செய்யுந்தொழில்விதமோ-சம்ப்ரமங்கள் 527

சொல்லமுடியாது தூங்குமஞ்சத்தேறினேன்
மெல்லவிழுங்கெர்ப்பத்தில்வேழம்போல்-நல்லதங்கத்

தாய்க்கிழவி வரவிட்ட வரிசைகூறல்

தட்டிலேபாக்குவெள்ளித்தட்டிலேவெள்ளிலைபொற்
பெட்டியிலேமல்லிகைப்பூபிச்சிப்பூ-வெட்டிவேர் 529

தந்தச்சிமிழிற்சவ்வாதுசூர்ணப்பட்டைதனிற்
கெந்தப்பொடிபவளக்கிண்ணத்திற்-சந்தனங்கள் 530

கூறுங்கிளிமொழியைக்கூடின்விடாயாறித்
தேறும்பொழுதிலுண்ணச்சிற்றுண்டி-வேறுசில 531

பீங்கானிற்பன்னீர்பிடிசெம்பிலேவெந்நீர்
தேங்காய்முலையார்சிலபேர்கொண்-டாங்குவந்து 532

மாமிவரவிட்டவரிசையென் றுவைத்துநின்றூர்
காமியவர்களைக்கண்காட்டினுள்-சேமமணி 533

படுக்கை சேர்ந்தமைகூறல்

வாசற்கதவடைத்தாள்மங்கைநல்லார்போனதற்பின்
பேசிக்குலைமிட்டுப்பேதைபோற்-கூசி 534

மதிவதனங்கோட்டிவளைதிருத்திநின்றுள்
புதியமணவறைப்பெண்போல-மதனுபி 535

ஷேகமேயென்பிராணஸ்நேகியே தாங்காதென்
மோகமேயென்றவளைமுந்திப்பிடித்-தேக 536

சயனத்திருத்திமுகந்தன்னின்முகஞ்சேர்த்து
நயனத்தில்வைத்தேனயனம்-தயவுவரப் 537

பேசிமலர்மல்லிகைவேர்பிச்சிமுடித்துக்கலவை
பூசிச்சவ்வாதுபுனுகணிந்து-நேசம் 538

பிடிக்கக்கொடுத்தாள்பிளவுதாம்பூலம்
மடித்துக்கொடுத்தாள்தன்வாயாற்-கடித்துக் 539

கொடுத்தாள்சிலசுருளைக்கொஞ்சிமடிமீதிற்
படுத்தாள்புளகம்படைத்தேன்-அடுத்து 540

அனுபோக வகைகூறல்

நடந்தகலவிசொல்லநாலுநாள்செல்லும்
விடிந்துதயமெய்தினுன்வெய்யோன்-மடந்தைநல்லாள்

விடிந்தபின் தன்செய்தி கூறல்

மேலிலங்குமஞ்சள்பட்டுவெண்பூணுல்பொன்பூணூல்
போலிலங்கக்கண்டுமனம்பூரித்தேன்-சால 542

அழுந்துநகக்குறியையாடவர்கண்டேங்கச்
செழுந்திரைநீர்வையையில்யான்சென்றேன்-தொழுங்குலத்து 543

நானவள்மேலாசையினுலுருவியென்றுகுப்பை
மேனிபிடுங்கிப்பல்விளக்கினேன்-மோனமந்த்ர 544

தர்ப்பணத்தைநீக்கித்தலைமுழுகினேன்கலவி
யுற்பனத்தையெண்ணியுருச்செபித்தேன்-பொற்புடைய

மாயஸ்திரீயைவிட்டுவந்துநேடுநெரமென்று
காயத்திரியைவிட்டேன்கர்மிபோல்-தூயமணி 546

தூவுதிரைவையையிலோர்சோமன்மறந்தேன்முன்
காவிரியிற்போட்டகலக்கம்போல்-தீவிரமாய்ப் 547

போனேனவண்மனையிற்பொற்கொடியாள்சொற்படியோர்
மானாளனையழைத்துவாருமென்று-மீனாக்ஷி 548

யாயிவீட்டிற்சமையலாச்சுதுபோமென்றாள்காண்
போயிருந்துசாப்பிட்டேன்போசனத்திற்-காய்கறிகள்

இன்னதெனவறியேனின்னரசமென்றறியேன்
கன்னிமேல்வைத்தகவனத்தால்-என்னுடைய 550

கையீரமாறுமுன்னேகாதலியைவந்தணைந்து
சையோகவைபோகசம்போக-மெய்போகம் 551

ஆகச்சுகித்தேனகப்பட்டேன்பாய்மரத்திற்
காகத்தையொத்தனனென்காதலால்-மோகவலைப் 552

தாய்க்கிழவி மருந்துகூட்டத்தொடங்கினமை கூறல்

பூட்டுக்குளானேனைப்போழ்வாய்ச்சிகைம்மருந்துக்
கூட்டுக்குளேயடைக்கக் கோப்பிட்டாள்[illegible]ட்டு 553

வனமூலிகை சேர்த்தமை கூறல்

மருந்துவகைநாவடக்கிவாதமடக்கிக்
கருந்துவரைபாடவரைகஞ்சா-பெருந்தும்பை 554
ஆதுளைமேற்புல்லுருவியாவிரைமேற்புல்லுருவி
மாதுளைமேற்புல்லுருவிவல்லாரை-தூதுவளை 555
பேய்ப்பீர்க்குப்பேய்முசுட்டைபேய்ச்சிமிட்டிபேய்ப்புட
னாய்ப்பாகனாயுருவிநாய்வேளை-நாய்க்கோட்டான் 556
புன்னைப்பூவன்னிப்பூப்பூளைப்பூத்தாழைப்பூ [லை
முன்னைப்பூமாம்பூமுருக்கம்பூ-சின்னிப்பூ 557
பூலாவேர்சங்கம்வேர்புங்கம்வேர்தைவளைவேர்
வேலாவேர்நெட்டிவேர்வெட்டிவேர்-பாலைவேர் 558
அத்திக்காய்துத்திக்காயல்லிக்காய்நெல்லிக்காய்
கத்திரிக்காய்பேய்ச்சுரைக்காய்காஞ்சிரங்காய்-மத்தங்காய்

நின்றுசிணுங்கிநிலம்புரண்டியாலின்கீழ்க்
கன்றுபணமுறிஞ்சிக்காஞ்சோறி-குன்றியிலை 560

பின்றொடரிமுன்றொடரிபெண்டொடரியாண்டொடரி
பொன்றொடரியைவாய்ப்புலிதொடரி-இன்பூறல் 561

ஆனைவணங்கியழுகண்ணிதொழுகண்ணி
பூனைவணங்கிப்புளிமடலை-ஊனு 562

தலைசுருளிநன்னாரிதான்றிவெள்ளைத்தோன்றி
மலைகலக்கித்தேள்கொடுக்குவாகை-யிலைகருநா 563

ரத்தங்காய்ப்பிஞ்சுதமரத்தம்பூப்பிஞ்சுமலை
நத்தைச்சூரிக்கொழுந்துநாட்டகத்தி-சித்தகற்றி 564

தோதகத்திபட்டநரைத்தோகத்திபஞ்சமா
பாதகத்திசூரியனைப்பாம்பணையும்-போதிற் 565

கடைச்சரக்குச் சேர்த்தமை கூறல்

கருத்துவகையாய்த்தேடிக்கட்டிக்கடையில்
மருத்துவகைகஸ்தூரிமஞ்சள்-அரைத்தசித்ர 566

மூலஞ்செவிட்டாகிமூலங்கடையினிற்றக்
கோலந்தாம்பூலங்குரோசாணி-ஏலம்வெலி 567

காரஞ்சீனக்காரங்கர்ப்பூரசாரமரி
தாரநவசாரஞ்சவுக்காரம்-காரீயம் 568

துத்தந்துரிசுதுருசாவசப்படுத்தும்
கொத்தமல்லிவெய்விளங்கங்குங்குமப்பூ-முத்தக்கா 569

செட்டுப்பணவிடையிந்துப்புவெடிவாணவுப்புக்
கட்டுப்புவீட்டிற்கறியுப்பு-மட்டிப்பால் 570

இஞ்சிலவங்கமிதன்பத்ரிசிங்களத்தோர்
கஞ்சியிலேபோடுங்கசகசா-மஞ்சள் 571

அதிமதுரமாசையதிமதுரமாக்கும்
சதகுப்பிசாதிக்காய்சாபத்ரி-அதிவிடயம் 572

பாக்குச்சிறுதேக்குப்பாஷாணம்வேப்பம்புண்
ணாக்குநிருவிஷமுள்ளாவியும்புண்-ணாக்குபச்சை 573

நாபியபினிமுதனுலுமுழநாலுமுலேப்
பாவீசவதரித்துப்பாரிலுள்ள-சீவன் 574

பிராணிகளினுறுப்புகள் சேர்த்தமைகூறல்

மருந்துவகைசெவ்வரணேவாலாந்தைப்பிச்சு
பருந்துநகமுதலேப்பல்லு-குரங்கிந் 575

திரியமரவட்டைசெவ்வட்டைபெட்டை
நரிமுதுகுத்தோலுடம்புநாக்கு-குருகு 576

முனேவாய்க்கருஞ்சேவன்முள்ளுவெள்ளேப்பல்லி
சினவலியாண்காடைச்சிறகு-பனேயடியிற் 577

குன்ஞன்கண்வாகைமேற்கூகைகீழ்வாயலகு
செந்நாய்ப்பவனவாய்த்தேவாங்கு-கன்னம் 578

வலியான்கழுத்துமணிக்காடைமுட்டை
யெலிமுளேபன்றியிறைச்சி-புலிமீசை 579

வல்லூற்றுவல்லெலும்புமாடப்புருவினெச்சம்
கல்லூரிக்கொம்புகவரிமயிர்-நல்லபாம் 580

பீரளேயீற்றெருமையிளங்கொடிசெம்
பூரமுசற்புழுக்கைபுற்றின்மேல்-தேரைக்கால் 581

தூக்கணங்குஞ்சுசுழல்வண்டுநண்டுகருங்
காக்கைநிணங்காராக்கருமுலேப்பால்-நாக்குப் 582

புழுப்பூனேப்பீசம்பொலிப்புக்கடாவின்
கொழுப்புப்பெருச்சாளிக்குட்டி-பழுத்தமர 583

வவ்வாற்றலேகுதிரைவாயினுரைகரடிச்
சவ்வுகிழவானேமதஞ்சங்கிலூான்-சின்னவட்டை 584

கன்னிகழியாதபிள்ளேகாதிற்சிறுகுறும்பி
தன்னேயறியாள்தலேயிற்பேன்-சின்னவட்டை 585

வாற்குருவிச்சந்தெலும்புவானம்பாடிக்குடலுள்
ளூர்க்குருவிக்கொக்கரைதன்னூருக்கு-மேற்குக் 586

கறட்டோரித்தொண்டைகாட்டோந்திமண்டை
வறட்டோரிதேடிவகையால்-நிறுத்து 587

மருந்துகூட்டினமை கூறல்

வனமருந்தெல்லாந்தயிலம்வாங்கிக்கடையிற்
கனமருந்தெல்லாம்பேய்க்கரும்பு-தனில்வடித்த 588
சாற்றிலரைத்துத்தசையூனைத்தாழியிலே
யூற்றியசாராயத்தி லூறவைத்துச்-சோற்றடுப்பிற் 589
செம்மிப்புதைத்துமறுதிங்களிலெல்லாமருந்தும்
அம்மியிலேயிட்டுமகளல்குலினீர்-செம்மைதரும் 590
நாக்கிலழுக்குநகக்தழுக்குக்காலடிமண்
மூக்கில்வெயர்வும்விட்டுமூன்றுநாள்-தாய்க்கிழவி 591

ஔஷதப்பிரயோகம் செய்தமைகூறல்

மைப்போலரைத்துருட்டிமங்கைநல்லாயிந்தவுண்டை
தப்பாதெனக்கொடுத்தாள்சர்ப்பனையால்-அப்பளத்தில்

மதிமயக்கமிகுந்தமைகூறல்

இட்டாள்பழத்திலேயிட்டாள்சுண்ணும்பிலே
இட்டாள்மதிமயக்கமெய்தினேன்-விட்டிருக்கக் 593
கூடாதுகண்ணுறக்கங்கொள்ளாதுசாப்பாட்டைத்
தேடாதுவேறுமனஞ்செல்லாது-பேடையாள் 594
மோகசமுத்திரத்தில்மூழ்குவதல்லாதுபிர
வாகநதியைமறந்துவிட்டேன்-மோகனஞ்செய் 595
சித்தசனன்மந்த்ரகலைதேர்ந்தறிவதல்லாது
நித்யசெபமந்திரத்தைநீக்கினேன்-தத்துவரிக் 596
கண்ணிசெயுமோடிக்குக்கால்பிடிப்பதல்லாது
புண்யநமஸ்காரங்கள்போட்டுவிட்டேன்-பெண்ணணங்கின் 597
செங்களபக்கொங்கைதெரிசனமல்லாதுசிவ
லிங்கதெரிசனத்தைநீக்கினேன்-அங்கசவேள் 598
மாபூசைவேளையவள்வாயமிர்தமுண்பதல்லால்
தேபூசைமேற்கவனந்தீர்ந்துவிட்டேன்-சோபமுற்ற 599

வஞ்சிக்க உபாயம் செய்தமை கூறல்

நாட்டமறிந்தென்னைநரைக்கிழவிமெல்லவொரு
பூட்டகந்தான்பேசினுள்பொன்பறிக்கத்-தாஷ்டிகரே 600

ஆடித்திருநாளழகருக்கின்றுகுதந்த
வேடிக்கைபார்க்கவெகுசனங்கள்-கூடியே 601

செல்லுகின்றார் நீங்களும்போய்த்தீர்த்தத்திலாடிவந்தால்
நல்லபலனெங்களுக்கு நண்ணுதோ-கல்வியீர் 602

என்றாளவ்வார்த்தைக்கிருந்தாலறிவிலியாம்
சென்றாலுமங்கைமேற்றேட்டமாம்-என்றுசெழுந் 603

தேனேமதனுபிஷேகமே நீவருவை
யானூற்றிருநாட்கழகென்றேன்-நானுமும்மைக் 604

திருவிழாவுக்குச்சென்றமைகூறல்

காணதிருந்தாலென்கண்ணுறங்குமோவென்று
பூணூர்......யாள்புறப்பட்டாள்-பாணிப்பாப் 605

பித்தளையினுலுடைமைபெண்ணுக்குப்பூட்டிவிட்
டத்தைதொடர்ந்தாளடிப்பிறகே-பத்துப்பேர் 606

பாங்கியருமின்றிவரும்பாவையுடன்சென்றழகர்
ஓங்குமலைத்தீர்த்தமூவந்தாடிப்-பூங்குழலாய் 607

மானுங்கலையுநரைமந்தியும்போலேயிறங்கித்
தேனுந்துபூந்துளபச்செங்கண்மால்-தானேறும் 608

தேருக்குப்பின்னுகச்சென்றோமோர்பாணவிசைத்
தூரத்தேஞானியையன்தோன்றினன்-தேருக்குப் 609

பக்கத்திலேயொதுங்கிப்பாந்தினேனப்புறத்தோர்
தக்கமறையோன்மனையிற்றங்கினேன்-கக்கத்தில் 610

தூக்கிட்டதோசைச்சுமையுமடிதனிலே
பாக்கிட்டகைவாளப்பையுமாத்-தாய்க்கிழவி 611

மாதைத்தொடர்ந்துவரமங்கையெனைப்பின்தொடா
பாதைவழிகொண்டேன்பரிசுடனே-பாதை 612

திரும்பிவருகையில் மோசம் செய்தமை கூறல்

அரைநாழிகைக்கப்பாலத்தைகுறுகி
வரைமாமுலையாய்மறந்தேன்-சரிகையிட்ட 613

சேலையென்றாளோடித்திரும்புகிறேனில்லுமென்று
வாலியப்பெண்மேலென்மனங்கிடக்கக்-காலிற் 614

கடுமையுளவோட்டமெல்லாங்காட்டினேனென்பின்
குடுமியிலேதட்டக்குதிக்கால்-விடுதியிற்போய் 615

மீளாமுன்னமங்கையிட்டவெற்றுடைமையைக்கழற்றிப்
பீளைதள்ளுங்கண்ணிபிழைகேடி-ஆளுடனே 616

போனாள்மதுரைக்குப்போய்த்துகிலைநானெடுத்து
மானாளைத்தேடிவரும்வேளை-தேனனையாள் 617

ஊரின்முருங்கையுருவியகோல்போனின்றாள்
மாரியெனக்கண்ணீர்வழிந்தோடக்-காரிகையே 618

என்னென்றேன்விம்மிவிம்மியேக்கம்போனாக்குழறி
முன்னின்றுமெள்ளமொழியலுற்றாள்-அன்னே 619

வருவார்நம்மையர்வழியிற்பறியார்
திருநாட்சனத்துடனேசெல்வோம்-அரிவையே 620

வாவென்றாள்விட்டுவரமாட்டேனானீபயந்தாற்
போவென்றேன்கோபமாய்ப்போயினாள்-கூவென்றாற்

கேள்வியுண்டோவந்தான்கிழவனொருவனையா
போழ்வாய்நரைத்தலையன்பூண்கட்டு-நீளத் 622

தடிக்கொம்புக்காரன்தனிவழியிலென்னை
அடித்துப்பறித்தானகன்றான்-திடுக்கிட்டேன் 623

என்றாளைத்தேற்றியதற்கெண்ணமேனான்னதிர்ஷ்டம்
ஒன்றுமேலக்ஷமுடைமையாம்-நின்று 624

வருந்தாதேயென்றுமதுரைக்குவந்து
திருந்திழையாள்வீட்டிலேசென்றேன்-மருந்துருட்டி

அங்கேவந்தாள்மகளையாவலாய்ப்பார்த்துடைமை
எங்கேயென்றாள்பறிபோச்சென்றுரைத்தாள்-செங்கை

தாய்க்கிழவி பொய்ப்புலம்பல் கூறல்

நெரித்தாள்பதறிநெரித்தகையைவிட்டுப்
பிரித்தாள்வயிற்றைப்பிசைந்தாள்-ஒருத்தருமில் 627

லாதவிடத்துடைமைக்காசையாயுன் னுயிரைச்
சேதப்படுத்திலென்னசெய்குவேனுன்-பேதை 628

மகளேயெனக்கதறிவாய்விட்டுத்தானழுது
வெருவாய்ப்பரதவித்துவிம்மி-நகைகளெல்லாம் 629

போச்சுதேகோயிலுக்குப்போகவரத்தடையொன்
ரூச்சுதேயூருமறிந்ததே-எச்சொன்று 630

வந்ததேபண்ணிமறித்துமிடக்காசுபணம்
சிந்துதோகண்டே னுன்தேட்டைநான்-வந்தடித்துக் 631

கள்ளர்பறித்தநகைகைக்குவருமோவுடைமை /
உள்ளதெல்லாம்ரத்நவுடைமையே-அள்ளியள்ளி 632

எண்ணியிட்டசெம்பொனிருநூறுநான்கொடுத்துப்
பண்ணியிட்டகொப்பும்பறிபோச்சே-புண்ணியவான்

திக்கடையவெற்றிகொண்டசிந்தமகூளேந்த்ரனிட்ட
கைக்கடகம்போலுமினிக்காண்பேனோ-விக்ரமகோ 634

தண்டசரபாணிதுரைச்சாமராயன்கொடுத்த
கண்டசரமேனிவட்குக்காட்டினேன்-அண்டலரை 635

வெட்டியவாள்வீரன்விரூபாக்ஷியான்கொடுத்த
ஒட்டியாணம்போலவுண்டாமோ-சிட்டர்புகழ் 636

ஆணிக்கனகநிதியப்புராயன்கொடுத்த
மாணிக்கமாலையைப்போல்வாய்க்குமோ-வாணர்புகழ் 637

அம்மைராயன்கொடுத்தவாணிமுத்துத்தாழ்வடத்தைக்
கொம்மைமுலையாட்கேன்கொடுத்தேனுன்-நம்முடைய

வல்லக்கொண்டையனருள்வச்ரக்கணையாழிக்
கல்லுக்கொருவர்விலைகாண்பாரோ-மல்லிசெய்த 639

கின்னரிப்பாட்டுக்குக்கெடிக்காமையன்கொடுத்த [புகழ்
பொன்னரைஞாண்போற் கிடைக்கப்போகுதோ-மன்னர்

கச்சுமுலையாளுக்குக்காளிங்கன்முன்கொடுத்த
பொற்சிமிக்கிப்போற்கிடைக்கப்போகுதோ-குச்சிலியக்

கெங்காசிராவளித்தகெம்பிழைத்தமோதிரம்போல்
இங்கார்கொடுப்பார்சொலேந்திழையே-மங்கைபுரி 642

நாட்டியத்தைக்கண்டுமெச்சிநத்தத்துலிங்கேந்த்ரன்
போட்டகொலுசெண்ணூறுபொன்பெறுமே-வாட்டமில்லாக் 643

கோகனகவதனன்கோபாலராயனருள்
மோகனப்பொன்மாலைமுற்றுமோகனமே-போகத் 644

திருமலைக்கண்டமன்னன்றந்தருள்சிந்தாக்கை
இருமுலையாட்கேன்கழுத்திலிட்டேன்-கருணைநிதி 545

பூசாரிராயனிட்டபொற்சவளிபோலவுமோர்
ஆசாரிபண்ணவறிவானோ.தேசமெச்சும் 646

போடிமகிபன்கொடுத்தபொற்சுட்டிகட்டிவிட்டுப்
போடியென்றேனென்னமதிபோனேன்யான்-தாடகையை 647

அம்பிற்பொருராமபத்ரதுரையன்றுதந்த
தும்பிப்பதக்குவிலைசொற்பமோ-செம்புபெறும் 648

நாடகத்தைக்கண்டுமெச்சிநம்முத்தையனளித்த
பாடகத்தைக்கண்டாற்பசிபோமே-நாடுபுகழ் 649

தொட்டராயன்கொடுத்தசோடுவச்ரவோலையும்பொற்
பட்டையரைஞாணும்விலைபண்ணுவதோ-வெட்டுகின்ற

வாளுலவுஞ்செங்கண்மடந்தைபொட்டுக்காறைபெந்த
ஈளுவன்வீட்டிலிருக்குதோ-தாளவட்டப் 651

பூணூர்முலையாட்குப்போட்டவெள்ளித்தண்டையெந்தச்
சாணான்வளவிற்போய்ச்சார்ந்ததோ-வீணையென் 652

மானுளைக்கொள்ளைகொண்டோன்வச்ரமுருகையெந்தக்
கோனான்றன்கையிற்கொடுத்தானோ-ஆனாலும் 653

மூவைந்தாம்பாட்டிகண்டமூக்குத்தளுக்கையென்ன
பூவென்றெங்கேயெறிந்துபோட்டானோ-பாதைல்லாய்

என்னசெய்வோநாமினிமேலென்றாள்கிழவியையும்
கன்னியையுந்தேற்றிக்கணக்கேற்றி-அந்நேரம் 655

அணி செய்திட்டமை கூறல்

ஐயாயிரம்பொன்னவல்போலப்பார்வையிட்டுக்
கையாரத்தட்டான்கடையிலிட்டுச்-செய்த 656

உடைமையெல்லாமந்தவுருப்படியேயிட்டு
வடிவையெல்லாம்பார்த்துமகிழ்ந்தேன்-கொடியிடையை

மஞ்சத்திற்கூடிமகிழ்ந்திருக்கும்போதொருநாள்
பஞ்சொத்தகூந்தலாள்பையவந்து-வஞ்சியே [ம்

கோயிலுக்குப்போவென்ருள்கோடியில்லைசேலையெல்லா
சாயமில்லையென்றுசலிப்பாளுள்-பேயே 659

பிறந்தவூருக்குப்புடவையேனம்மை
அறிந்தவரேயல்லான்மற்ருர்காண்-நறுங்குழலாய் 660

பொன்னின்குடத்தக்குப்பொட்டிடலேன்போவென்ருள்
அந்நேரமாதையழைத்துப்போய்-நன்னிசெட்டி 661

ஆடைவாங்கிக் கொடுத்தமை கூறல்

கட்டுவர்க்கச்சேலைக்கடையிலிடைக்கிசைந்த
பட்டுவர்க்கம்பார்த்துப்பளபளப்பாம்-மட்டுவர்க்கப் 662

பாவாடையிட்டமொழிப்பாவைக்குப்பொன்ரவிக்கை
பாவாடைவர்க்கம்பதிளுறு-மேவியிரு 663

செப்புவர்ணப்பூமுலைக்குச்செம்பருத்திப்பூநிறத்துக்
கொப்புவர்ணமாய்த்தீர்ந்தகோப்புவர்ணம்-இப்புவியில்

ஆதிவர்ணம்போலுமழகுடையாளுக்கிசைந்த
வீதிவர்ணச்சேலையொன்றுவிந்தையாம்-வாதுமத 665

பாணத்தார்க்கூந்தற்பவளவாய்ப்பைத்தொடிக்கு
வாணத்தார்ச்சேலைவகைமூன்று-வேணுமணி 666

முத்துவர்ணமூரல்நல்லாள்மூலைக்குள்வைத்துடுக்க
முத்துவர்ணசேலையிலேமூன்றுவகை-வைத்ததிருச் 667

சூரணவர்ணத்திலகுசுட்டிறுதலாட்கிசைந்த
நாரணவர்ணச்சேலைநாலைந்து-போரிற் 668

படைமுறிச்சுக்குத்தியகட்பாவையாள்கட்ட
உடைமுறிச்சுக்குத்தியிலேயொன்று-தொடையால் 669

சொருகுமணிக்குழலாள்சோடிணையாக்கட்ட
அருகுமணிச்சேலையிலேயஞ்சு-பிரிவுகொண்டு 670

செல்லாச்சேலைப்பொருங்கட்சேயிழையாள்கட்டநல்ல
சல்லாச்சேலைத்தரமாய்த்தானிரண்டு-மெல்லமெல்ல 671

வாளெழுத்தோளாடவரைமாலழுத்துவாளுடுக்க
ஆளெழுத்துச்சேலையிலேயாறேழு-நீளெழில்சேர் 672

சுந்தரத்தோண்மங்கைக்குத்தொட்டிழுத்துக்கட்டநல்ல
சந்திரகாந்தக்கச்சுதானைந்து-அந்தரத்தில் 673

இந்திரகாவிற்குலவுரம்பையனையாட்கிசையச்
சந்திரகாவிச்சேலைதானிரண்டு-சிந்துமழை 674

மாரிக்கொடிமின்மருங்கிற்கிணங்கியகஸ்
தூரிக்கொடிச்சேலைசோடிரண்டு-காரிகைக்குக் 675

காங்குசரிகைச்சேலைகம்பாவரித்துகில்பட்
டாங்குகம்பிச்சேலையரைவர்ணம்-தாங்குசிலம் 676

பெச்சரிக்கையென்னுமிடைக்குச்சரியிதென்றற்
குச்சரிகைவர்க்கமெல்லாங்கொண்டீந்தேன்-உச்சிதமாத்

தாய்க்கிழவிகேட்டாள்தனக்கிரண்டுசேலையந்தப்
பேய்க்குதவாவிட்டாற்பிழைப்பேது-பாக்களந்த 678

பலவகைக் கடன்றீர்த்தமை கூறல்

வன்னியென்றும்பாலளந்தமாரியென்றுநெய்யளந்த
சின்னியென்றுநெல்லளந்தசெல்லியென்றும்-எந்நேரம்

வைவதுவும்போவதுவும்வாசலிலேநின்றலம்பல்
செய்வதுவும்போலிட்டாள்தித்திரிப்புக்-கைமேலா 680

அந்தக்கடன்காரர்க்கென்றேநானைம்பதுபொன்
இந்தக்கடன்காரிக்கீந்துவிட்டேன்-அந்திசந்தி 681

தாய்குடிக்கப்பெண்குடிக்கச்சாராயமூற்றிவெறிப்
பேய்பிடிக்கவிட்டநெட்டைப்பிச்சிவந்து-ந்யாயமோ 682

தப்பறைக்காரியென்றுசண்டைக்குவாய்திறந்தாள்
முப்பதுபொன்போட்டுவாய்மூடிவிட்டேன்-செப்புமுலை

தெய்வபூசைக்குக் கொடுத்தமை கூறல்

மங்கைவயிற்றைவலிக்குதென்றுமார்க்கமிட்டாள்
அங்கைதொட்டக்காலதிகமாகுதென்றாள்-எங்கள் 684

குலதெய்வம்பண்ணுதிந்தக்கோட்டாலையென்ருள்
கலைகுலைந்துசோர்வடையுங்காணுள்-சிலைநுதலாய் 685

தெய்வக்குறைக்கென்னசெய்யவேணுஞ்சொலென்றேன்
கையிலெரிவாளுங்கட்டளையாச்-செய்த 686

உருவேணும்பொற்சுருமாலைவேணும்
இருகாலுக்குசிலம்புமீணுப்-புருவைகளும் 687

செஞ்சேவலும்வேணுஞ்சேவிக்கும்பம்பைக்கோர்
அஞ்சாறுபொன்வேணுமாடிவரக்குஞ்சமிட்டுப் 688

பூங்கப்பரையெடுத்துப்பூசையிடவேணுமென்ருள்
ஆங்கப்படிக்கீந்தேனைம்பதுபொன்-தாங்கருங்கண் 689

தன் கையிருப்பை வைத்திருக்கக் கொடுத்தமை கூறல்

வாளைதாவுங்காதுமாதுநல்லாய்நான்கேட்ட
வேளைதாவென்றவுடன்வீட்டிலே—ஆழாக்கு 690

முத்துவைத்துவைத்தேன்முடிப்பாவோராயிரம்பொன்
வைத்துவைத்தேன்பின்னுமொருமாணிக்கம்-சித்திரக்காற் 691

பின்னும் பலவிதத்தால் வஞ்சித்துப் பொருள் கவர்ந்தமைகூறல்

கட்டிலென்றுங்கட்டிலின்மேற்கட்டிசகலாத்தென்றும்
வட்டிலென்றுஞ்சீப்புவகையென்றும்-கட்டுமட்டாம்

குத்துவிளக்கென்றுங்குடப்பாலெருமையென்றும்
பத்தணையேரென்றும்பசுக்களென்றும்-மெத்தையென்றும் 693

மச்சுவீடென்றுமனைக்குதிர்களென்றுமங்கை
மெச்சிவிளையாடிநிற்கமேடையென்றும்-கச்சிறுக்குங்

கொங்கைச்சிமிழ்மாதுகூடப்பிறந்தசின்ன
தங்கச்சிக்கால்களுக்குத்தண்டையென்றும்-இங்கிதமாய்

ஆடவிட்டநட்டுவனுர்க்கங்கியென்றுஞ்சங்கீதம்
பாடவிட்டபாடகற்குப்பாகையென்றும்-சேடியர்க்குக்

கம்பிகுறிச்சேலையென்றுங்காதோலையென்றும்வெள்ளித்
தம்பிக்கையென்றுந்தபலையென்றும்-செம்பென்றும் 697

தங்கச்சிமிழ்சவாதென் றுமாண்டியப்பன்
கந்தப்பொடியென் றுங்கதம்பமென் றும்·சந்தனங்கள்

என் றுமாடிக்கழிவுக்கேற்றதென் றுந்தைப்பொங்கற்
கென் றுஞ்சிவராத்திரிக்கென் றும்·நின் று 699

தலைதடவிழுளை தனையுறிஞ்சுவார்போற்
பலவிதமாயேய்ச்சுப்பசப்பிக்-கலவையணிந் 700

தோங்குமிள ......யாளுடனிருக்கவேயுயிரை [டுக்
வாங்குவதுபோற்பொருளைவாங்கிவிட்டாள்-சோங்கிலிட்

கட்டியசெம்பொன்னைக்கடலிற்கவிழ்த்ததுபோல்
ஒட்டொழியத்தோற்றுவிட்டேனுள்ளதெல்லாம்-இட்ட

மருந்தாலிருளுமருளுங்கொண்டாற்போல்
இருந்தேன்கொடுக்கவகையின்றி-உரிந்து 703

விற்றிறுத்து வெறுங்கையனானமை கூறல்

கலைவிற்றேன்காதிற்கடுக்கனையும்விற்றேன்
மெலிவுற்றேன்தாய்க்கிழவிவீட்டுச்-செலவுக்குத் 704

தந்திரமாய்க்கேட்டாள்தலைகவிழ்ந்துநான்துரும்பு
குத்துவதைக்கண்டாள்குறிப்பறிந்தாள்-எத்தியென்னைத்

தாரைவிட்டவேல்விழியாள்தாய்க்கிழவிவார்த்தையைக்கே
டோரைவிட்டுப்போக்கற்குபாயமிட்டாள்-சேரவென் றும் [ட்

தூரத்தவகை தேடினமை கூறல்

மின்புறங்காட்டுஞ்சயனமேற்படுத்தாலென்புறத்திற்
பின்புறங்காட்டிப்படுப்பாள்மேசாமல்-அன்புடனென் 707

செய்யாவுபசாரஞ்செய்யப்போனாலுமுழங்
கையாலிடிப்பாள்கடுகடுப்பாய்ப்-பையவே 708

அன்னைவந்துதன்னையழைக்கச்சென்றுமந்த
சன்னையறிந்தென்னைவிட்டுத்தானேகிப்-பொன்முடிப்பு

வாங்குவதுங்கூடுவதும்வந்தெனருகிற்படுத்துத்
தூங்குவதுமாகத்தொழிலெடுத்தாள்-பாங்கியரிற் 710

மதனுபிஷேகம் தன்னை ஏசினமைகூறல்

கோப்புடையமாயக்குருவியைவிட்டுப்பழைய
மாப்பிளைமார்தம்மைவரச்சொல்லிப்-பேய்ப்படுவாய் 711

அன்னையராய்வந்தாலருகிற்போய்நானிருந்தாற்
சன்னைதெரியாதோசவுங்கலே-என்னடா 712

போடாவெளியிற்புதுமண்டபத்திருந்து
வாடாவெனச்சொலுவாள்மட்டுமிஞ்சி-ஓடியங்கள 713

சொல்லத்தொடுத்தாள்துரத்திடினும்பூட்டியசெக்
கெல்லைவிட்டுப்போகாவெருதானேன்-மெல்ல 714

தாய் மகளை ஏசினமை கூறல்

மகளையழைத்துமருட்டுருட்டிச்சொல்வாள்
தகல்பாஜிப்பார்ப்பான்சதமோ-முகமாயம் 715

என்னசெய்தானீயவனுக்கேற்றவுடம்படிக்கை
என்னசொன்னாய்பார்த்தவருக்கேற்குமோ-மின்னே 716

கொடுக்குமட்டும்வாங்கிக்கொடாதிருத்தால்விட்டு
முடுக்கலலலோவேசிமுறைமை-எடுப்பார்கைப் 717

பிள்ளையோநீயுமென்னபேய்ப்பிள்ளையாய்மாப்பிளைமார்
கள்ளரைப்போலேதிரியக்காரணமேன்-மெள்ளமெள்ள

ஓடங்கடக்கவிட்டாலோடக்காரன்றலையிற்
போடுவதுசொட்டென்பார்பூதலத்தோர்-வாடீ 719

சிலைநுதலாய்நானுனக்குச்சேர்த்தமருந்துக்கு
மலையுநகர்ந்துவருமே...வயிற்றைத் 720

தொட்டதோகன்னஞ்சுரிந்ததோகூந்தனரை
யிட்டதோமேனியிளைத்ததோ-தொட்டவனை 721

விட்டுப்பிரிந்தக்கால்வேறுபிழைப்பிலையோ
முஷ்டிவாங்கிப்பயலோமோப்பரீச்சு-கெட்டிகெட்டி 722

ஊரைவிடப்பற்றென்றுளுதாரிவீட்டிறப்புக்
கூரையிலொன்றிக்கேட்டுக்கொண்டேனுன்-மேனைதப்பி

சண்டையிட்டமை கூறல்

நன்றிமறந்தாரைநடுக்கேட்குமோதெய்வம்
என்றுசொல்லிவந்தேனெதிரேநான்-என்றவுடன் 724

ஆங்காரமிட்டாளென்னாஸ்தியெல்லாந்தன்கையால்
வாங்காமல்வாங்கிவிட்டமாமியார்-ஆங்குவரும் 725

பேய்மடையர்பொன்னும்பெருங்குளத்துநீரைத்தன்
வாய்மடையாலேயுறிஞ்சுமாமியார்-ஈயாரைப் 726

புல்வாயைக்கண்டபுலிபோலப்போய்ப்பிடிக்கும்
வல்வாய்க்கிழநெட்டைமாமியார்-பல்லுவிழும் 727

கோப்புளதன்மூப்பைக்கொடுத்திளமைவாங்கமொட்டை
மாப்பிளைமாரைத்தேடுமாமியார்-கேப்பைக்கும் 728

பிஞ்சுமாங்காய்க்கும்பிளவுக்கும்வெற்றிலைக்கும்
மஞ்சளுக்குஞ்சஞ்சரிக்குமாமியார்-மஞ்சத்தே 729

தேற்றித்தனைமுன்புசேர்ந்தபணக்காரர்முறை
மாற்றிமகளுக்கிணைக்குமாமியார்-போற்றிவைத்த 730

காசழியாமற்றிரியுங்காவிப்பறக்காரரைத்தன்
வாசல்மிதிக்கவொட்டாமாமியார்-ஆசைகொண்டு 731

சேயிழையைச்சேர்ந்தவரைத்தேற்றிக்கழுத்தறுக்கும்
ஆயுதம்போலுங்கருநாக்கத்தையார்-மேயவொரு 732

செம்பிலேதண்ணீருஞ்சீலைப்பாயுங்கொடுபோய்
அம்பலத்திலேபடுக்குமத்தையார்-வெம்புலிபோல் 733

தாஷ்டிகரையும்பிடித்துத்தாலக்கத்திம்மாவென்
றூட்டிப்பணம்பறிக்குமத்தையார்-மேட்டுப் 734

பொலிப்பாட்டைப்போலேபுறப்பட்டாளன்று
பொலிப்பாட்டுப்பாடப்புகுந்தாள்-வலுத்தவர்போல் 735

என்னசொன்னாய்பார்ப்பனீயின்னமொருகாற்சொல்லு
கன்னத்திலேயறைவார்காணேனே-சின்னஞ் 736

சிறுக்கியுனக்குநன்றாச்சிக்கினாளோநான்
கிறுக்குப்பிடித்தகிழவி-உருக்கி 737

வசமாக்கவல்லோவகைசெய்தாய்வைப்பு
நிசமாச்சோகுல்லாலி நீயோ-பசிவேளைக் 738

கேதுகொடுத்தாய் நீயித்தனைகாலந்திரிந்தாய்
போதுமினிப்போவென்றாற்போகாயோ-மாதுனக்கு 739

தாய்மாமன்பிள்ளையோதாலிகட்டித்தந்தேனோ
நீமாத்திரமகட்குநேசமோ-மாமிகிட்டத் 740

தந்தபணஞ்சேதமுண்டோசாண்வயிற்றுப்பிச்சைக்கு
வந்தவனும்பெண்ணுக்குமாப்பிள்ளையோ-சொந்தமாக் 741

கிட்டக்கிடக்கக்கிடைப்பாளோதேவடியாள்
இட்டொருவனைச்சேர்வதெத்தனைநாள்-குட்டுணியுன்

வாணாளைவாங்கிடுவேன்வாயைமூடுன்வயிறு
சாணோமுழமோசவுங்கலே-நாணமற்ற 743

மூடாவிதேகுமுழக்கம்வெளியிலே
வாடாவொருகால்மதிகேடா-நாடலாம் 744

என்றுபுடவையிறுக்கினாள்நானவளைத்
தின்றுவிடத்தக்கசினமானேன்-நன்றியற்ற 745

பாவிநீகேளாய்பழங்கதைசெந்தீயிடைப்பட்
டாவிவிடும்பாம்பையெடுத்தாதரிக்கத்-தாவி 746

நளன்கரத்திற்றீண்டியதுநன்மைசெய்யக்கர்மம்
விளைந்தகதையென்னளவில்மெய்யே-உளம்பதறிப் 747

பேசலாமோநீபுறம்விடலாமோதுடுக்காய்
ஏசலாமோகொடுத்ததில்லையோ-ராசியமேன் 748

செட்டிகளுக்கெல்லாந்தெரியாதோநான்கொடுத்த
கட்டிவராகன்கணக்குண்டோ-தட்டார் 749

அறியாரோவூராரறியாரோவுன்னெஞ்
சறியாதோதோஷமலவோ-மறுபடியுன் 750

கிட்டவைத்தவென்முடிப்போகேளாய்க்கிழப்பிணமே
எட்டுதலைமுறைமட்டிங்குண்டே-கெட்டபுத்திக் 751

கந்தலேயென்றேன்கமட்டினுழையடா
சந்தையின்மானங்கெட்டாய்சரசம்போல்-முந்துன் 752

வளவிற்சிலவுடைமைவைத்துவைத்தேனென்ருய்
க்ளவாணியப்பயலேகண்ணேக்-கிளறட்டோ 753

பின்னுசைவேண்டாம்புறப்பட்டுப்போவென்ருள்
அந்நேரமோர்வடுகனுயுதமும்-கன்னப் 754

பரிசையுந்தன்காலிலேமரப்பாசும்போட்டுப்
பெரியபட்டைநாமமுந்தன்பின்னே-ஒருவனுமாய்க் 755

கக்கத்தில்வாளிடுக்கிக்காச்சுழுச்சென்றுவந்தான்
பக்கத்திலேசலிகைபாராட்டி-வெட்கமறந் 756

தாடாதகூத்தெல்லாமாடியேயம்பலத்தில்
வாடாவென்றென்னேவறட்டுத்தோய்ப்-பாடி 757

மடியைப்பிடித்தாள்மயிரைப்பிடித்தேன்
தொடையிலடிப்பட்டதவள்தோற்பை-மடிநழுவித் 758

தொங்கியகைவாளமென்று தூக்கிச்சுருட்டியெடுத்
தங்கையினுற்கக்கத்தடக்கினேன்-மங்கையென்னேத் 759

தள்ளினுளஞ்சாறுதாக்கினேன்பொக்கைவாய்க்
குள்ளிபிடித்தாள்குடுமியை-உள்ளூரார் 760

சபையேறினமை கூறல்

கூடிவிலக்கிவிட்டார்கூகூவென்றம்பலத்தில்
ஓடினுள்நானுமுடன்சென்றேன்-தாடகைபோற் 761

போயப்பொழுதேபுதுமண்டபத்திலந்தக்
கோயிற்றலத்தாரைக்கூட்டமிட்டாள்-வாய்விட் 762

டழுதாள்மகளேயருகேநிறுத்தித்
தொழுதாள்மடைமாறிசொல்வாள்-பழியஞ்சிப் 763

கிழவி அறிவிப்புக் கூறல்

பட்டரேதேவேந்த்ரபட்டரேமீனுக்ஷி
பட்டரேகாமாக்ஷிபட்டரே-இஷ்டநர 764

சிங்கையரேநாராயணதீக்ஷிதரேசெவ்வந்தி
லிங்கையரேயெங்கள்சொக்கலிங்கையரே-சங்கரா 765

சாரியாரேயனந்தசாஸ்த்ரியாரேகைவிஸ்
தாரியாரேகோவில்ஸ்தானிகரே-ஊருக்குள் 766

ந்யாயமிலேயோநடுவிலேயோபார்ப்பாரப்
பேய்பிடித்ததேயெனதுபெண்பிளேயைக்-கோயிலுக்குள்

அஞ்சாறுமாதமாயாடிப்பாடித்திரியச்
சஞ்சாரங்கண்டீரோசர்ப்பனேயாப்-பஞ்சமாப் 768

பாவியிந்தப்பார்ப்பான்பணயங்கொடுத்தொருநாள்
மேவியிருந்தான்விடிந்தவுடன்-போவானென் 769

றெண்ணினேனென்னமருந்திட்டானேவென்னவினை
பண்ணினனேமதநூல்பாடமோ-பெண்ணணங்கை 770

வைப்பென்றுபேரிட்டான்வட்டிலிற்கஞ்சிக்குமகள்
உப்பென்றுகேளாதுபாயமிட்டான்-கைப்பிடித்துக் 771

கொண்டானைப்போலக்குடிலமிட்டான் ஆண்பூண்டு
கண்டாலும்பேசாமற்கட்டிட்டான்-ஒண்டொடிக்கு 772

வாடைப்பொடியிட்டான்வாய்ப்பூட்டெனக்குமிட்டான்
கோடைச்சுழித்துவைத்துக்கொள்ளையிட்டான்-மாடாயோர் 773

பட்டிவைக்கிறேன்பலதொம்பைக்கூட்டிற்சம்பாநெல்
கட்டிவைக்கிறேன்பொற்கடாரங்கள்-எட்டேழு 774

தூங்கவைக்கிறேனென்முன்சோற்றுக்குத்தூங்கவைத்தான்
ஏங்கவைத்தானம்பலத்திலேற்றிவைத்தான்-வீங்கலிவன் 775

இக்குவந்தகாண்முதலாயேதுகொடுத்தான்தனக்குக்
குங்குமச்சம்பாவரிசிகொள்ளவென்றும்-பொங்கலுக்குப் 776

பாசிப்பயறென்றும்பாலென்றுநெய்யென்றும்
தோசைக்குளுந்தென்றுஞ்சோமனென்றும்-பூசுவதுக்

கானசவ்வாதென்றுமலகுபாக்கென்றும்ரச
பானவர்க்கமென்றும்பகலிரவாய்-ஏனே 778

படுக்கைக்குவாழைப்பழமென்றுங்கேட்பான்
கொடுக்குங்கடன்போற்கொடுத்தேன்-மடக்கொடியாள்

பொட்டொழியக்காதிற்பொகடியொருகோடொழிய
ஒட்டொழியத்தோற்றேழுடைமையெல்லாம்-பட்டிமகன்

மோகினிமந்த்ரமுழுதுமறிவான்மதன
னுகமங்களெல்லாமவதானம்-நாகரிகப் 781

பொட்டறிவானுந்தண்டுப்பூச்சறிவானும்போகக்
கட்டறிவானுமொருநாள்கைவாளத்-தட்டறையிற் 782

சோதித்தேன்சின்னமயிர்த்தோலுநரிக்கொம்பும்வி
பூதிக்கிழியும்பொடியுமதில்-ஏதுக் 783

குருட்டிவைத்தானேசிலதுஉண்டையுநான்கண்டேன்
திருட்டுப்புரட்டனென்றுதேர்ந்தேன்-அரைக்காசுத் 784

தொண்டனிவனம்பலத்திற்சோதிப்பாரென்றிங்கே
கொண்டுவருவானேகொண்டுவரான்-வண்டனிவன் 785

மானேர்விழியணங்குமாதவிடாயானக்கால்
தானேவிடவருவான்தண்ணீரை-மானுஷமோ 786

அல்லும்பகலுமடைத்தகதவைத்திறவான்
மெல்லியலைச்சற்றும்வெளியில்விடான்-சொல்லுவதென்

பத்துவிசையாம்பகலுக்கும்ராத்திரிக்கும்
பத்துவிசைக்குமென்றன்பார்வைபோல்-உத்தரிக்க 788

ஆர்க்குமுடியுமிவனாலுமுன்பிறப்பில்
ஊர்க்குருவியோபெண்ணுடம்பிலே-தீர்க்கவொண்ணா

நோவொதுங்கவிட்டானாறுவயதுப்பயிர்க்குப்
பூவொதுங்கவிட்டான்பொறுபொறென்று-பாவிமகன்

சொன்னங்கொடுப்பதென்றுசொன்னதுவுண்டல்லாமல்
என்னகொடுத்தானிதுவரைக்கும்-என்மகட்கு 791

மோகங்கொடுத்தான்மூலையரையாப்புக்கொடுத்தான்
மேகங்கொடுத்தான்மெலியவிட்டான்-ஆகம் 792

சிரங்காளுள்தம்பியிட்டதீமருந்தால்மாது
குரங்காளுள்குத்திருமல்கொண்டாள்-மருந்து 793

கொடுப்பவரார்புண்ணுக்குக்கூசாமற்கிட்டப்
படுப்பவராரென்மகளைப்பாவி-கெடுத்தானே 794

தேட்டுவந்துசேருஞ்சிறுவயதிற்போக்கறுவான்
வீட்டிற்புகுந்தான்விடுதிபோல்-நாட்டமாய்க் 795

கூடவுந்தங்கிந்தக்குடுமிதலையைக்கண்
டாடவர்களெல்லாமகன்றுவிட்டார்-தேடாமல் 796
நித்திரைக்குப்பொன்னூறுநித்தங்கொடுத்துவந்த
முத்திரைப்பண்டாரமோமோடிவைத்து-மெத்தக் 797
கறுப்பானுன்மாலைகட்டிக்கன்னியப்பன்முற்றும்
வெறுப்பானுன்மெய்காவல்வேலன்-சிறுக்கிமேல் 798
ஆசைவைத்தவாத்தியாரையர்முறைதப்பிதமாப்
பாஷைவைத்துப்போனார்பகையானார்-காசுபணம் 799
மாரியெனச்சொரிந்தமாரியப்பன்சண்டையிட்டு
வீரிவளவிற்போனுன்மீள்வானோ-தேரேறப் 800
பொன்னுடைமைபூட்டிவிட்டபொன்னப்பனந்திசந்தி
சன்னையிட்டுப்பார்த்தான்சலித்துவிட்டான்-பின்னை 801
வரத்துமில்லைத்தானும்வழங்கானோர்சேலை
தரச்சொன்னாளின்றைக்குச்சண்டைக்-கொருப்பட்டான்
வைதானெனையுமயிர்பிடித்தான்செய்யாது
செய்தான்மகளைச்செவியிலே-கையால் 803
அடித்தான்விலக்குமவரைமுழங்கையால்
இடித்தான்கரத்தினுலென்னை-இடுப்பொடியப் 804
போட்டானங்கேமூர்ச்சைபோனேனெழுந்திருந்தேன்
கேட்டார்சிரிக்கவல்லோகீர்த்திவைத்தான்-மூட்டிசெய்த
தேதென்றுநீர்கேட்டாலென்னசொல்வான்தாய்க்கிழவி
சூதென்பான்வாரிச்சொரிந்தபொருட்-சேதம் 806
கணக்குண்டோவென்பான்களரிமெச்சவிந்தத் [ம்
துணிக்குண்ணியோகொடுப்பான்சொர்ணம்-மணக்கவள
மாந்தரிட்டுக்கட்டிவளர்த்தகடாக்கையிலே
பாய்ந்தகதைமெய்யாய்ப்பலித்ததே-ஈந்ததில்லை 808
தாயுமகளுமொருதாமரையினீராளும்
பேயுமிரங்குமேபெண்ணென்றால்-தூயவரே 809
கண்டநடுப்பேசிக்கணக்குப்பார்த்துப்பொருளைத்
தெண்டித்துவாங்கியிந்தச்சேமனைநீர்-கண்டிப்பா 810

மெட்டுக்கடக்கவெருட்டிடுமென்ருளென்ற
சட்டித்தலைப்பேயைத்தானமர்த்திப்-பட்டன்மார் 811

நில்லென்ருருன்வாழ்க்கைநிர்ப்பாக்கியா நீயும்
சொல்லென்ருர்சொல்லத்தொடங்கினேன்-கல்லும் 812

தன்னறிவிப்புக் கூறல்

கரையுமேமாயமாற்கள்ளிசொன்னவார்த்தைக்
குரையுமெதிர்வழக்குமுண்டோ-ஓருநாள் 813

நடந்தகதைகேளீர்நடுக்காட்டுள் நீலி
தொடர்ந்தாளோர்செட்டிதனைச்சூதாய்-நடந்தவன்கைப்

பத்திரத்தாற்றப்பிப்பழையனூரம்பலத்தில்
மொய்த்திருந்தவேளாளர்முன்சென்ருள் சத்துருப்போல்

ஆலங்காட்டுப்பேயதோவருகுதென்மனையாள்
கோலங்காட்டிப்பகட்டிக்கொண்டென்ருன்-நீலியெனும்

கள்ளிமுலைப்பாலுங்கண்ணீருங்கால்கழுவக்
கள்ளியொன்றைப்பிள்ளையாக்கையேந்தி-மெள்ளவந்து

நாட்டிலேகண்டதுண்டோநல்லோரேயென்னைநடுக்
காட்டிலேவிட்டார்கணவனர்-மீட்டுமவர் 818

கிட்டவந்தார்நான்பயந்துகெஞ்சிவந்தேன்வாளுருவி
வெட்டவந்தார்முன்னுள்விதிப்படியோ-முட்டமுட்டப்

பேயென்ருரென்னையிந்தப்பிள்ளைகள்ளிக்கொம்பென்ரு
தாயென்ருரில்லைதமரில்லை-தூயவரே [ர்

பீர்விட்டபான்முலைக்கீழ்ப்பிள்ளையைவிட்டாலதுதான்
ஆர்கிட்டப்போமென்றறியலாம்-பாருமென 821

விட்டாள்சபையிலதுமெள்ளத்தவழ்ந்துமடி
தொட்டேறச்செட்டிதனுக்கென்ருன்-ஒட்டாரம் 822

பண்ணுகிருன்செட்டியென்ருர்பார்த்தவரெல்லாமவளை
கண்ணுணை நீலியென்ருன்காணடுங்கிப்-பெண்ணலது [ன்

சத்துருப்பேயாகிச்சதிசெய்தால்நாங்களுனக்
கித்தனைப்பெரும்பழிகாணென்றுரைத்துப்-பத்திரத்தை

வாங்கிவணிகனையுமார்க்கமிட்ட நீலியையும்
பாங்கிலொருவீட்டிற்படுக்கவைத்துத்-தூங்குமெனப்

பூட்டிக்கதவடைத்துப்போயினார்பேய்மதியோர்
வாட்டமுற்ற நீலிபழிவாய்ச்சுதென்றே-ஊட்டி 826

பிடித்தாள்வணிகன்பிடரிதனைக்கையால்
ஒடித்தாள்கடித்தாளுதிரம்-குடித்தாள் தான் 827

நீண்டாள்பிளந்தெறிந்தாள்நெஞ்சிற்குடர்மாலை
பூண்டாளெழுந்தாள்பொருள்வணிகன்-மாண்டதற்பின்

கண்டார்வழக்கையெந்தக்கற்பனையாற்சர்ப்பனைகள் [க்கூ
விண்டாலும்பெண்வார்த்தைமெய்யாங்காண்-அண்டினர்

ளுக்கிநடுக்காட்டிலடித்துப்பறித்தூரிற்
கூக்குரலுமிட்டாற்பின்கூறுவதென்-வாய்க்கலினம் 830

பூண்டபரியெடுத்துப்போட்டதுமல்லாதுகுழி [மறை
தோண்டுதென்றானினிமேற்சொல்வானேன் - ஆண்ட

அந்தணரே நானிவன் மேலாசைகொண்டேன்மோசமதா
இந்தவிதிவருமென்றெண்ணாமல்-முந்தமுந்தக் [ய்

கூனிமருந்தையிட்டுக்கூறுகொண்டாளன்றுமுதல்
மேனியொடுங்கினேன்மெய்ம்மறந்தேன்-நானிவட்கு

முன்னாட்கடனேமுதலிடுவார்போற்கொடுத்த [ல
பொன்னோபொற்பூந்துகிலோபூஷணமோ-சொன்னசெ

வத்தனைக்கும்வீணேயழித்ததெல்லாம்யான்கணக்கிட்
டெத்தனையென்றுங்கட்டியம்புவேன்-நித்தம்நித்தம்

வல்லார்தனத்திசொந்தவைப்பென்றுபேரனையும்
அல்லாமற்போக்குவரத்தாயிரம்பேர்-நல்லவள்போல்

உள்ளதெல்லாமெள்ளவுபாயமாவாங்கியெனைத்
தள்ளிவிடக்கள்ளிதளமெடுத்தாள்-உள்ளுடையப் 837

பேசினாள்சும்மாப்புறப்பட்டுப்போடாவென்
றேசினாள்நீகொடுத்ததென்னென்றாள்-கூசாமல் 838

முந்திமடிபிடித்தாள்முந்தானையைக்கிழித்தாள்
சந்தியிலேபூணூல்தனையறுத்தாள்-இந்தநரைத் 839

தாட்டாணைவந்தென்றலையிலொருகுட்டு
போட்டாளென்குட்டெல்லாம்போச்சையா-மோட்டு 840

வடுகனையென்மேல்விடுத்தாள்மற்றொருவனல்
விடுவானோபுண்ணியவான்விட்டான்-இடுதூறாய் 841

அந்தக்கிழவியலக்கழிக்கப்பார்த்திருந்த
இந்தக்குமரியேனென்றாளோ-சந்த்ர 842

கலைவாணுதலணங்கேகாதலென்மேலுண்டோ
இலையோவுனக்கென்றேனெட்டித்-தலைமேற் 843

சளக்கென்றடித்தாள்சதிகாரிவீட்டு
விளக்கிலடித்தாள்பின்வெள்ளி-முளைக்குமுன்னே 844

முந்திபோட்டுன்மேலேமுக்காலுமாசையென்று
சந்திவீரப்பன்முன்னேதாண்டினாள்-வந்தொருவன் 845

மூத்தங்கொளுவாய்க்குமுன்னொருவன்தான்கொடுத்த
அத்தப்பலங்கொடுப்பார்க்காணையுண்டோ-வித்தக்ரே

மேனியிட்டுநல்லமெழுகுபிள்ளையார்போலே
யானிருந்ததிர்க்கமறியீரோ-கூனியெனக் 847

கிட்டமருந்தாலுமிவள்கொடுத்தபுண்ணாலும்
ஓட்டிவுலர்ந்தவுடலானேன்-மட்டைக் 848

கிறுத்ததெல்லாம்போகட்டுமென்பொருளீதென்று
மறித்துமொருபொன்முடிப்புவைத்தேன்-நிறத்தமுழு

மாணிக்கமொன்றுபணிமுத்தொருசிரங்கை
பேணிவைக்கச்சொல்லிவைத்தேன்பெண்ணிடத்தில்-ஏணியைவை

தேறவிட்டுவாங்கியெனையிக்கோலங்கண்டசுழன் [த்
மாறிகிட்டவாங்கிவழங்குவீர்-வேறெனக்குத் 851

பின்னும் தாய்க்கிழவி அறிவிப்புக் கூலல்

தஞ்சமில்லை நீங்களே தஞ்சமென்றேனந்நேரம்
தொஞ்சமூலைக்காரிதுடி துடிப்பாய்-வஞ்சத் 852

திருடனிவன்கூத்திச்செலவுக்கும்போக்கி
ஒருமுடிப்பைவைத்ததுவுமுண்டோ-மருதங் 853

குடியிருக்குதேயழகர்கோயில்பதினெட்டாம்
படியிருக்குதேமுதலைப்பள்ளம்-நடுநியாயம் 854

சொல்லுதேசிங்கம்பிடாரிதுடியாமல்
கொல்லுதேதீர்த்துக்கொடுக்கிறேம்-அல்லவென்றால்

என்னைக்கிடத்தியெனதுமகள் தாண்டமகள்
தன்னைக்கிடத்திநான் தாண்டுகிறேன்-சொன்னதென்ன

தெள்ளிமையோமுற்பிறப்பிற்சீர்கேடனென்மகட்குப்
பிள்ளையோவென்றாள்பெரியோர்முன்-கள்ளிசொல்லைக்

சபையார் விசாரணை கூறல்

கேட்டுநகைபுரிந்தார்கிட்டவழைத்தென்னையவர்
கூட்டத்துக்குள்ளிருத்திக்கூறுவார்-வாட்டமுற்ற 858

மாதவரேவேசிமருந்திட்டாளென்றீரச்
சேதியுமக்கெங்கேதெரிந்ததென்றார்-காதல்தந்த 859

மருந்திட்டதறிந்தமை கூறல்

மூத்தனையாள்நேற்றிரவுமூலைக்குள்வைத்துநிறை
குத்தியரக்குக்குடித்துக்கூட்டமிட்டிவ்-வத்தைமுதல் 860

வெள்ளாட்டிகளுங்குடித்துவெறிபிடித்துத்
துள்ளாட்டமாடமங்கைதூஷணித்துத்-தள்ளித் 861

தலைக்கடையில்விட்டாளென்தன்னையொருத்தன்
விலக்கெருதுபோற்புகுந்தான்வீட்டில்-மலக்கமாய்த் 862

திண்ணைத்தலையிற்படுத்திருந்தேன்குண்டுணிவாய்க்
கண்ணியங்கேவந்தாள்கலைநெகிழ்த்து-உண்ணும் 863

அரக்குவெறியாலவளென்மேல்வீழ்ந்து
குரக்குவெறிபோற்.........பொருத்தியெனைப் 864

பண்ணுதகோலமெல்லாம்பண்ணினாளார்க்குமொருப்
பெண்ணுசையாலுற்பிடிக்குமோ-அண்ணர்களைச் 865

சம்போகஞ்செய்வதுபோற்றன்னுலேயாவதெல்லாம்
அம்பாருங்கண்ணிபார்த்தாகாமல்-வெம்பியே 866

காட்டுமருந்துங்கடைமருந்துமுன்மருந்துங்
கூட்டியிட்டாலாசையொருகோதைமேல்-நாட்டம்வர
வொட்டுமோவென்றுனுடந்தையாகத்திரிந்த
வட்டமுலையாள்சொல்வகைவகையாற்-சிட்டரே 868

இந்தவிதம்நானறிந்தேனென்றுரைத்தேன்கேட்டுநல்ல
விந்தையெனச்சிரித்தார்மேலோர்கள்-சிந்தைநொந்த

சபையார் தன்னைத் தேற்றினமை கூறல்

பூசுரரேவேதபுனிதரேயம்பலத்தில்
தாசியுடனேறத்தகாதுகாண்-வேசியொரு 870

செய்யமறைவேதியனைச்சென்னியிற்கல்லிட்டகலை
ஐயரேநீர்தாமறியீரோ-கையில் 871

திரவியத்தைவாங்கியுமைச்சீவனுடன்விட்ட
மரியாதைக்குண்டோவழக்குப்-பெரியோரே 872

வேதியராயுள்ளவர்கள்வேசியரைக்கண்டக்காற்
காதவழிவிலகல்காரியங்காண்-ஓதுமறை 873

மந்திரநூல்வாயான்மதுரவாய்ரசங்கொள்ள
எந்தவகைதுணிவாயெண்ணினீர்-சிந்தைமயல் 874

தீர்த்தவாசிக்குத்திரவியமெல்லாங்கொடுத்துத்
தீர்த்தவாசிக்கடனைத்தீர்த்துவிட்டீர்-கீர்த்தியா 875

நாமறியாக்கூத்துநடித்துவிட்டீரும்மளவோ
மாமறையோர்க்கெல்லாம்வசையாச்சே-சேமநிதி 876

தன்னைப்பறித்தாள்தரச்சொல்லுமென்றீரப்
பொன்னையினிக்கேட்கப்போகுமோ-பொன்னைப்போற்

கூட்டியசெந்தேனெடுத்துக்கொண்டபேர்தம்மையவர்
ஓட்டியவீத்தெண்டிப்பதுண்டோகாண்-சூட்டரவின் 878

வாய்க்குளகப்பட்டமண்டூகமும்யானை
வாய்க்குளகப்பட்டவான்கரும்பும்-தீக்குள்ளே 879

விட்டநறுநெய்யும்வெயின்முகத்திலேவெடிக்கப்
பட்டகமரில்விட்டபாற்குழம்பும்-கட்டுபுகழ் 880

பாங்கினுற்றேடாப்பரமலுத்தர்கைப்பொருளும்
வாங்கினலிப்பொருளும்வாங்கலாம்-நாங்கள்சொன்ன

புத்திவழிநின்ருற்பொருளரிதோ நீர்கற்ற
வித்தையிலேசெம்பொன்விளையுமே-எத்தும் 882

பரத்தையருக்கீந்ததிலும்பத்தத்தனையாய்
வரத்தக்கயோகம்வருங்காண்-கருத்திலே 883

எண்ணியிடையாதிருக்குமூர்க்கேகுமென்று
புண்ணியர்தாந்தம்மனையிற்போயினர்-பெண்ணணங்கைப்

தான் கலங்கித் தெளிந்தமை கூறல்

பின்னடத்திச்செல்லினவள்பின்னழகைப்பாரேனே
முன்னடத்திச்சென்ருள்முழுப்பாவி-நல்னீர்க்கட் 885

டாகுங்குளத்திலனுபவித்துவற்றியபின்
வகும்பறவைகளைபோலேகினுள்-மோகமுற்ற 886

என்னைக்கிழவியிடர்செய்தெனைப்பிரியாக்
கன்னிதனைப்பிரிவுகண்டாளே-இந்நாட்டில் 887

மாட்டுமதித்தாய்க்கிழவிமாமிதலையிற்கல்லைப்
போட்டுப்புறப்பட்டுப்போவோமோ-நாட்டமுற்ற 888

ஊரெங்கேதோழரெங்கேயுற்ருரெங்கேமனைவி
யாரெங்கேயஷ்டாவதானியெனும்-பேரெங்கே 889

நானுவிதமுமெண்ணிநட்டாற்றுக்கோரையைப்போல்
ஆனேனெனக்கலக்கமாகினேன்-யானே 890

ஆலயஞ் சென்று தெரிசித்தமை கூறல்

எனைத்தேற்றிக்கொண்டுபோயெங்கள்சொக்கலிங்கந்
தனைப்போற்றியென்கவலைசாற்றி-அனுக்கிரகம் 891

பெற்றிரண்டாஞ்செம்பொற்பிரகாரம்யான்வலமாச்
சுற்றிவயிரவசுவாமியையும்-முற்றும் 892

வணங்கியம்பொற்கம்பந்தனக்குவடபால்
இணங்குந்திருவாசற்கிப்பால்-மணங்கமழ்பூ 893

மாலை நிரைத்தமணிவாசன் முன்முகப்பிற்
சோலை நிரைத்ததிருவிளக்கும்-பாலரவி 894

காந்திதர நிரைத்துக்கட்டளையாய்
வாய்ந்ததெல்லாஞ்சொர்ணமயமாகித்-தேய்ந்தமுனை 895

நெட்டிலைவேற்சங்க நிதிக்கரசனுபரணப்
பெட்டிதிறந்தப்ரகாசம்போற்-சட்டப் 896

புழுகுமணக்கப்பொலிந்தவறைகண்டு
தொழுதேனை திசயமுந்தோன்றப்-பழுதில் 897

மறையோன்மணியம்வரதையனென்போனவ்
வறைவாசலிலிருந்தானேயா-நெறியுடையாய் 898

நாகமகூளேந்த்ரன் கட்டளை கண்டமை கூறல்

ஆருபயமீதென்றேனுடலபயன்முல்லைத்
தாருலவுமேருத்தடம்புயமால்-பாராளும் 899

யோகமகாராசனென்பதூர்வாழ்பெரிய
நாகமகூளேந்த்ர நரபாலன்-தோகைமயில் 900

மீனாக்ஷியம்மைக்குமிக்கசொக்கலிங்கருக்கும்
தானாட்சியானவுபசாரமா-மேன்மையபி 901

ஷேகமதுமாலைசிறப்பமுதுதீபமுத
லாகநடப்பிக்குமறையென்றான்-மோகநமக் 902

இழந்த பொருளுக் கிரங்கினமை கூறல்

கிட்டணையுங்கன்னிக்கிறைத்ததெல்லாமிப்படியோர்
கட்டளையாச்செய்துபலன்கண்டோமோ-சிட்டர்தொழும்

அங்கயற் கண்மைக்கழகுதிருவாசியொன்று
தங்கத்தினாலேசமைத்தோமோ-சங்கரர்சொக் 904

கையர்மகிழ்ந்தேறவபிஷேகபண்டாரம்
செய்ததிருத்தேர்போலச்செய்தோமோ-வைபோகம் 905

பெற்றபுதுமண்டபத்திற்பின்புறமுமுன்புறமும்
பொற்றகடுகொண்டழுத்திப்போட்டோமோ-மற்றுமெங்கள் 906

மாலழகருக்குவயிரத்தான்மின்னெறித்தாற்
போலழகாமங்கிபண்ணிப்பூட்டினமோ-சாலையறம் 907

செய்தோமோகோதானஞ்செய்செய்தோமோபூதானம்
செய்தோமோசத்திரங்கள்செய்தோமோதுய்யநிதி 908

ஆரிடத்தில்வாங்கியரும்பலனைத்தேடுவோம்
பேர்படைத்தபெஞ்சைப்ரதாபனென்ப-தூர்படைத்த

அப்பிரபுவிடத்துத்குச் செல்லத் துணிமை கூறல்

ஐயன்பெரியநாகையனிடஞ்செல்வோமோ
செய்யுமறைவேதியரேசெப்புமென்றேன்-எய்துதிருப்

பாற்கடலுக்கேகினவர்பால்குடியாரோவிதற்கு
மேற்புத்தியுங்கேட்கவேணுமோ-சூற்கொண்டு 911

பெய்யுமழைக்குநனையாதபேருமவன்
கையிலேற்காவருங்காதணேனன்-ஐயமின்றிப் 912

போமெனவெண்ணீறுதந்துபூசிவிட்டார்சந்தனத்தை
யாமெனச்சொக்கேசரடிபணிந்து-மாமேவு 913

கூடலழகர்மதனகோபாலர்பூந்துளவ
வேடலருந்தார்வீரராகவமால்-மாடேறும் 914

நல்லாண்டவர்யார்க்குமிம்மையிலேநன்மைதரு
மல்லாண்டவர்பாதம்வாழ்த்தியே-செல்வ 915

மடந்தையங்கயற்கண்வாசலறச்சாலை
கடந்துமறுவீதிகடந்து-நடந்துவரப் 916

மதுரையினின்றுஞ் சென்றமை கூறல்

பின்னிழுக்குமோர்காலைப்பெண்ணாசைமாமிசினம்
முன்னிழுக்குமோர்காலைமூன்றுதரம்-பின்னே | 917

திரும்புவதுமீள்வதுமாய்ச்சீமாட்டியாசைக்
கரும்பைநினைத்தேன்கருத்தில்-விரும்புமவள் 918

குன்றிருக்குமென் ... மேற்கூடிக்கலந்தசுகம்
இன்றொருத்தன்பாங்காயிருக்குமோ-மன்றலந்தார்ச்

சுற்றுட நான்படுத்ததூங்குமஞ்சமீதிலொரு
பற்றுப்பயலும்படுப்பானோ-மற்றுமந்தச் 920
சந்தியிலேமாமியிட்டசண்டையிலேவந்தவொரு
தொந்திவடுகன்சுகிப்பானோ-முந்திவிளை 921
யாடியனுராகம்பாடியுறவாடிநான்]ல்
கூடியதெல்லாநினைத்துக்கொள்வாளோ-மேடையின்மே
இண்ண ...மேற்பதித்தகிள்ளையார்த்தென்னையுஞ்சற்
றெண்ணிநெடுமூச்செறிவாளோ-எண்ணிற் 923
படாதபாடித்தனையும்பட்டேனென்பாவம்
இடாதோபிரமனுர்க்கென்றே-தடாமல் 924
வடக்குமுகக்கோட்டைவசால்நடுக்கட்டு
முடக்கில்வரும்போதெனக்குமுன்னே-அடக்கமுள்ள

ஞானியாரைமறுபடியும் கண்டமை கூறல்

மாறுபரஞானியையன்மதுரைக்கன்
றேனேவந்தானென்னெதிராக-நானவனைக் 926
காணுமளவிற்களவாண்டவன்போலென்
சாணுடம்புங்குன்றியொருசாணானேன்-நாணயமாய் 927
மாமிதனைக்கண்டமருமகள்போலானேனைச்
சாமியெனையன்பாய்த்தழுவினான்-நாமறிய 928
ஆனைபோலேயிருந்தீரையரேயும்முடம்பு
பூனைபோலேயொடுங்கிப்போவனேன்-ஆனவிது 929
என்னவகையென்றான்மற்றேதுவகைநீர்முதலே
சொன்னவகைகேளாததோஷவகை-முன்னுமது 930
கையைவிட்டுவேசிமகள்கால்பிடிக்கச்சென்றேனென்
மையையிட்டகண்ணிக்குமாலானேன்-பையவுண்டை
கூட்டியிட்டாள்கைப்பொருளைக்கொள்ளையிட்டாள்கைக்கு
ஆட்டியிட்டாளிக்கோலமாக்கியிட்டாள்-கேட்டார் [ரங்கா

ஞானியார் தேற்றினமை கூறல்

நகைப்பாரென்றேனிதற்குநாணமேன்யார்க்கும்
வகைதப்பாமோசம்வாராதோ-பகுத்தறிவாம் 933

இந்திரன்மெய்யோனிக்கணீரைஞ்ஞூருன துவும்
அந்தணனுர்சென்னியிலொன்றற்றதுவும்-சுந்தோப 934

சுந்தர்மடிந்ததுவுஞ்சுக்ரீவனல்வாலி
மூந்தமடிந்ததுவுமுன்னொருநாள்-நந்தன் 935

மாமானதுமிலங்கைவாழ்வேந்தன்சிந்து
சிரமானதும்வச்ரதேகத்-துரம்படைத்த 936

கீசகனுர்மாண்டதுவுங்கேட்டீரிலையோபெண்
ணாசையாலென்பதறியீரோ-பூசுரரே 937

கைப்பொருள் போச்சென்றுகவலையேன்கல்வியொன்ருல்
மெய்ப்பொருளாம்பாவலர்க்கு வேளாண்மை-இப்புவியில்

மன்னனுமாசறக்கற்ருேனுஞ்சீர்தூக்கின்
மன்னனிற்கற்ருேன்சிறப்புடையன்-மன்னனுக்குத் 939

தன்றேசமல்லாற்சிறப்பில்லைகற்ருேர்க்குச்
சென்றவிடமெல்லாஞ்சிறப்பென்று-நன்றிபெற 940

அவ்வைசொன்ன நீதியறியீரோ நீரினிமேல்
இவ்விடம்விட்டுங்களூர்க்கேகுமென்று-தெய்வ 941

மறைவல்லோனென்னைவழிவிடுத்துப்பார்த்துத்
தறுகிநின்ருனென்மேற்றயவால்-நெறியுடனே 942

ஒன்பதூர் நோக்கிச் சென்றமை கூறல்

ஐம்பதூர்க்கேகியலைந்துபலனேதென்றே
ஒன்பதூர்க்கேகவொருமித்தேன்-முன்புகருங் 943

நற்சகுனங் கண்டமை கூறல்

காகமிடத்திருந்துகைக்குவலப்புறத்தில்
ஏகக்கருடனிடமாக-யோகபலம் 944

ஏடகங் கண்டமை கூறல்

இன்றுவந்ததாகுநமக்கென்றுவந்தேனேடகத்திற்
சென்றுவந்தேயந்தச்சிவனுரை-அன்றுதெரி 945

சித்தேனென்பூர்வசெனனதோஷங்களெல்லாம்
இத்தேசங்கண்டதெனவறியேன்-அத்தலத்தில் 946

வேம்புகரும்பாமாம்வெண்மணலோநீருமாம்
தாம்புவிடுநீரமிர்தந்தானுமாம்-தேம்பும் 947

வறியேன்மருந்தின்மயக்கமுநோயுந்தீர்த்
தறிவாளனுக்கிவிட்டதவ்வூர்-நெறியுடனே 948

அற்றைநாள்தங்கியருணோதயத்தெழுந்து
மற்றைநாண்மேற்குவழிகொண்டேன்-வெற்றிபுரி 949

கோடுகொண்டமால்யானைக்கூளேந்த்ரனென்பதூர்
நாடுகண்டேனென்கவலைநான்காணேன்-ஆடகவான்

பின்பு நாட்டுவளங் கண்டமை கூறல்

எட்டியபூஞ்சோலையெழிற்கமுகும்வாழைகளும்
கட்டியபூங்காவனமாக்காண்பிக்க-விட்ட 951

வருக்கைபலாக்கனியைமந்தியிருகைக்கொண்
டிருகைக்குமதுமத்தளக்கொட்டென்ன-உருக்குமிசை 952

வண்டுதித்திகூடவரிக்குயில்கள்பண்பாடக்
கண்டுகிளிகள்கவிபாடத்-தண்டாத 953

மன்றலந்தாரல்லிமலர்வாடைகாற்றலடிபட் [லகில்
டொன்றோடொன்றுதாளம்போலொத்திசைப்ப-நின்று

நீலவன்னத்தோகைநெடுஞ்சிறகைமேல்விரித்துக்
கோலவனிதையர்போற்கூத்தாடச்-சோலைக்குள் 955

பாங்குநதிபாயுமலரோடைவாளைவாள்
வாங்கியவீச்சுவளங்காட்டப்-பூங்காவில் 956

வந்துநுழைந்துசெல்லும்வாலரவிகூத்துக்குப்
பந்தம்பிடிக்கும்படிசிறப்ப-முந்த 957

முகைத்திருக்குமுல்லைமலர்மொய்த்திருந்துபார்ப்போர்
நகைத்திருக்கும்பாவனையாய்நண்ண-மிகுத்தபொறி 958

வண்டாடுஞ்செங்காந்தள்வாடையாலேயசைந்து
கொண்டாடுவோர்கைக்குணங்காட்டக்-கண்டெதிர்புன்

னுகமலருநறுங்கொன்றைப்பூவிதழுந் [ரித்
த்யாகமெனப்பொன்னுமுத்துஞ்சிந்திநிற்பத்-தோகைவி

தாடுகின்றமஞ்ஞையெதிரன்னம்பறந்துவந்து
போடுகின்றவெண்டுசுபோற்படிய-நீடுவயற் 961

சாலிக்கதிர்குலையுந்தாமரையுமந்தநறுஞ் [ளம்
சோலைக்குண்மன்னர்குழாஞ்சூழ்ந்ததொக்குஞ்-சோலைவ

ஏதென்றுசொல்வேனிருதோளும்பூரித்தேன்
வேதன்றொழுங்கோயின்மேட்டிலே-சீதையுடன் 963

திம்மராயரைக்கண்டு தெரிசித்தமை கூறல்

மாதவனைக்கண்டேனென்வல்வினையெல்லாமுடனே
ஆதவனைக்கண்டபனியாக்கினேன்-பாதம் 964

தொழுதுதிம்மராயாதுதித்துணைப்பாடாமல்
பழுதிலேவேசையரைப்பன்னரி-முழுவதுமுன் 965

மீனவடிவையந்தமின்னார்கண்ணென்று நீ
யானசிங்கரூபமிடையாமென்றும்-மேன்மையுடன் 966

மைக்கிசைந்தரூபத்தைமங்கையர்கூந்தலென்றும்
கைக்கிசைந்தசங்கைக்கழுத்தென்றும்-திக்கனைத்தும்

தந்திப்புவனமெலாந்தந்தவனைத்தந்தமல
ருந்திதிருமுகத்துக்கொப்பென்றும்-சந்ததமும் 968

வேயடுத்தநின்னிசையைமின்னார்வசனமென்றும்
நீபடுக்கும்பாயைநிதம்பமென்றும்-வாய்பிதற்றிப் 969

பாடினேனிந்தப்பலன்கண்டேன்சிந்தைமலர்
சூடினேன்பாதந்தொழுதெழுந்தேன்-ஆடி 970

பதியின் சிறப்புக்கண்டமை கூறல்

அளகாபுரிக்குமமராவதிக்கும்
வளமானவபுரிக்குவந்தேன்-பளபளெனும் 971

செம்பொனெடுமதிலுந்தேரோடும்வீதிகளும்
கும்பமுடிநிறைத்தகோபுரமும்-அம்பரத்தில் 972

ஆற்றுநீரள்ளியருக்கனுடல்குளிரத்
தூற்றியபொன்மாடத்துகிற்கொடியும்-நீற்றொளிசேர்

தன்னிறத்தைப்பொன்னிலத்துத்தந்திக்கீந்தந்நிலத்துப்
பொன்னிறத்தைப்பெற்றபுரிசைகளும்-இன்னவழ 974

கத்தனையுங்கண்டுமகிழ்ந்தையன்கோவிலனும்
கர்த்தனையுங்கண்டுகமலத்தாள்-பத்தியுடன் 975

அரண்மனைகண்டு சென்றமை கூறல்

சேவித்தேன்கோயிலுக்குத்தென்புறத்திற்கற்பகப்பூ
நீவித்தேனூற்றுநெடுமதிலும்-மேவுமுகம் 976

இட்ட மணிப்பொற்குடங்களெட்டுவகைச்செந்திருவின்
வட்ட.........போலிலங்குமாளிகையும்-தொட்டுக் 977

குழைக்கின்றநல்குரவுகொண்டேனைவாவென்
றழைக்கின்றதுபோனின்றாட்டம்-தழைக்கின்ற 978

சிங்காரவெள்ளைச்செயடாலுங்கண்டிதுவே
எகோனரண்மனையென்றெய்தினேன்-துங்கப் 979

படையாற்றிருடர்பயத்தாற்கொடையால்
அடையாதவாசலுக்குளானேன்-தடவிகட 980

காந்துதழற்சிறுகட்காரானைநிற்பவது
ஏந்துகொம்பைக்கண்டுபகீலென்றுமனம்-சோர்ந்துநான்

வெல்லவிட்டபூணணியாண்டென்முலைமேலென்மனதைச்
செல்லவிட்டேன்மெள்ளத்திருப்பினேன்-செல்வமுதல்

வாசலுக்குண்மன்னர் வருவாரும்போவாரும்
சேசெயெனுஞ்சந்தடிக்குட்சிக்கினேன்-வீசுகின்ற 983

பட்டைக்கம்புக்குப்பயந்தெனைப்பின்பற்றிவந்த
மொட்டைக்கலியன்முடுக்குண்டான்-கிட்டப்போய் 984

அத்தினேன்கொல்லரெனையாரென்றாரப்பாநான்
வித்துவானென்றுசொன்னேன்விட்டுவிட்டார்-மொய்த்தமணிப்

கொலுச்சிறப்புக் கண்டமை கூறல்

பத்திவிலாசப்பவளக்காற்போதிகைப்பூ
வைத்தகனகமணிமண்டபத்தில்-இத்திகிரி 986

வானலோகம்புரக்குமால்பெரியநாகேந்த்ர
கூளபூபாலன்கொலுவாகத்-தோளிற் 987

செயமாதுகூத்தாடத்திங்கண்முகமேற்பங்
கயமாதுதன்கருணைகாட்டக்-கையிலேந்து 988

நெய்வடித்தவாள்செவிக்குநேராகநின்றெனக்கூண்
எவ்விடத்தையாசொல்லெனக்கேட்பச்-செவ்வியபூஞ்

சந்திரகாவித்தலைப்பாகைமேற்கவிகை
சந்த்ரோதயகாந்திதான்காட்ட-அந்தரமும் 990

திக்கனைத்துஞ்சுற்றச்சிறகடிக்கொள்கீர்த்தியைப்போல்
மிக்கிரட்டைப்பாவாடைவீசிநிற்கச்-செக்கர் 991

அவிரொளிரத்நாங்கியடுத்திருபால்வீசும்
கவரியுபயநிறங்காட்டக்-கவலைபடும் 992

சொற்காட்டுமொன்னார்தொழுதுவிழுந்துகெஞ்சிப்
பற்காட்டுஞ்சென்னிபதித்தமணி-முற்காட்டும் 993

சாமித்துரோகரைப்போற்றண்டைமுகப்பில்வெற்றிச்
சோமத்தலைபோலச்சோதிவிட-வீமரண 994

திரதுரைமக்கள்செயமந்திரிமாரும்
வீரதளகரத்தர்களும்வேந்தர்களும்-பார்மதிக்கும் 995

ஸ்தானுபதிகளும்ப்ரசண்டநியோகிகளும்
நானுகலைதெரிந்தநாவலரும்-கோன்முறைமைக் 996

கிந்தவகைக்கிந்தவகையின்பந்தருவதென்ன
வந்துபரராசர்மனுக்கேட்பச்-செந்திருவாழ் 997

துய்யவதனசந்த்ரசோபைநறுந்தெள்ளமுதைத்
தையனல்லார்செங்கட்சகோரமுண்ணக்-கைகுவித்து

வாரிட்டராணுவரிசையாய் நிற்கவெதிர்
காரிட்டயானைநின்றுகாதாட்டத்-தாரிட்டுப் 999

பொன்னின்முகப்பூட்டுப்பூட்டிநிரைத்தடில்லி
வன்னப்பரிகளைத்துவாவிநிற்க-எந்நேரம் 1000

கூடுஞ்சனவூழியக்காரர்கோடிசெயத்
தேடுங்கனசேருவைகாரர்-சோடிட்டுத் 1001

தந்திரமாய்க்காலிலிட்டதண்டைகளுங்கேடயமும்
கத்தியுமாய்வந்துநின்றுகைகுவித்துச்-சித்தம்வரச் 1002

சிங்களத்தைவெட்டிச்சிறைபிடிக்கவோநாங்கள்
வங்களத்திலேகலகம்வைக்கவோ-மாங்காத 1003

வல்லத்துக்கோட்டையைப்போய்வாங்கவோவாங்காத
கொல்லத்தைக்கொள்ளையிட்டுக்கொள்ளவோ-மெல்லப்போய்ச்

சொல்லையாவென்னத்துடிமணியக்காரர்பணம்
செல்லும்வரவுஞ்செவிக்கேற்ற-நெல்லுநிதி 1005

ஆயக்கமுஞ்செலவுமாதாயமுங்கழிவும்
வாயிற்கணக்கர்வந்துவாசிக்கத்-தேயத்துக் 1006

கோவோலைவாசகத்தைக்கூறுவார்தாமெழுதி
ஏவோலைக்கொப்பமிடச்சொல்லத்-தாவித் 1007

தகருந்தகருந்தலையுந்தலையுந்
தகருந்தகருமெனத்தாக்க-விகடநட 1008

மல்லராய்முற்பகையுமல்லராய்க்கட்டிவிழு
மல்லராய்க்கைகுவித்துவாங்கிநிற்ப-வெல்லக் 1009

குறும்புள்ளாயங்கைக்குறும்புள்ளாய்க்கோபக்
குறும்புள்ளாய்ப்பாய்ந்துகுதிகொள்ளப்-பறங்கிகளும்

சோனகருந்தந்ததுரிதவராகனிது
சீனரவரவிட்டசிவிகையிது-யானைகட்டி 1011

மிண்டுகொண்டமைசூர்மேல்வேட்டைபோய்நம்முடைய
தண்டுகொண்டுவந்ததனங்களிது-மண்டலிகர் 1012

இட்டதிறைகளிதுபராக்கென்றுசொல்லிக்
கட்டியர்கொண்டாடக்கனபேரி-கொட்டரண 1013

மல்லாரிகொட்டவகோபிலமால்கோயிலா
ரெல்லோருமோர்பாலினிதிருப்ப-நல்லமிர்த 1014

போசனங்கூளபூபாலன்சமுத்திரத்து
மாசனமுமன்ருடிமங்கலத்து-மாசனமும் 1015

அத்தலக்குண்டுமகாசனமுமாற்றூராம்
அத்தலத்தில்வைதிகநூலந்தணரும்-வித்வசெனர் 1016

பக்ஷமுறுமெங்கோன்பவிசும்பலன்களுமொன்
றக்ஷயமாமென்றக்ஷதைவழங்க-ரக்ஷகனும் 1017

கோரசிங்கரூபவுக்ரகோதண்டபாணியைப்போல்
வீரசிங்காசனத்தில்வீற்றிருந்தான்-சூரியன்முன் 1018

பங்கயம்போலானேன்பரபரெனச்சென்றெதிரே
செங்கைதனையேந்திச்செயமென்றேன்-இங்கே 1019

இருமென்றென்னையணிடங்காட்டப்பெற்றேன்
அருகிலிருந்தேன்மகிழ்ச்சியானேன்-கருணைபுரிந் 1020

தென்மேல்விழிவைத்தானெங்கோன்குறிப்பறிந்து
பொன்மேவும்பொஞ்சைப்புரந்தரா-மன்னு 1021

நிகளங்காமல்லாநிலைக்கோட்டைராயா
அகளங்காவாளுக்கபிமா-நகைமுகப்ர 1022

தாபாகலிகோபாசதுராவிருதுபண்டு
பாபாவலக்கவம்சபாக்யகுல-நீபா 1023

சுமுகப்ரமுகவளிதசுகுணகுணரவியனைய
சமுகநகைமுககமலதளநயனு- 1024

மதுரவிதவசனமிர்கமதமெழுதுபுயசைல
சதுரதடகடகரடசமரசரி-உதயகெரு 1025

விதநடனபரிநகுலவிகடமிடுமகுடமுடி
அதிரவடிவருடுசரணடலபய-அதுலகுல 1026

சந்திரசிந்துரசந்தனகுங்கும
மந்த்ரகொங்கைமடந்தையர்சுந்தர 1027

கல்விப்பெருங்கடலேகற்பகக்கன்றேகமலச்
செல்விக்குவாய்த்ததிரவியமே-வெல்லுமதக் 1028

கூன்கோட்டியானைக்குறுகாரெனுங்காட்டு
மான்கூட்டஞ்சாடும்வரிப்புலியே-மீன்கூட்டம் 1029

பாதிக்குறநிவந்தபன்றிமலைச்சாரலிலே
ஆதிக்கஞ்செய்திருக்குமாளியே-ஓதுபகை 1030

வீரமண்டலீகரெனும்வேழங்களைவிழுங்கும்
பாரகண்டபேரண்டபக்ஷியே-சேரலராய் 1031

அண்டிப்பொருவோரரிக்குலத்தைவாளுகிராந்
தண்டிற்கிழிக்குஞ்சரபமே-திண்டிறல்வேற் 1032

போசேந்த்ராசக்ரபுவனேந்த்ராராஜாதி
ராசேந்த்ராதீனஜனரக்ஷகா-வீசுதிரை 1033

ஆற்றிலேநாலுமனுதினமும்பொன்னூறும்
ஊற்றிலேயாறுமுடையானே-ஏற்றமுள்ள 1034

பத்தூரொவ்வொன்றுப்படைக்குந்தலையூராம்
நத்தூருமொன்பதூர்நாயகனே-மொய்த்தகடல் 1035

ஒப்பத்திரண்டதளமுள்ளசதுருடியங்கள்
முப்பத்திரண்டுபெற்றமொய்ம்பனே-இப்புவியில் 1036

அண்டலரைவெல்லுமறுபத்துநாலுமன்னர்
கண்டசெயதுங்கரணகங்கணனே-மிண்டுகொண்டு 1037

சண்டைக்குடில்லித்தளம்வந்ததாலும்
கண்டுமலையேறுதகண்டனே-தண்டஜய 1038

தண்டனேகாரியவுத்தண்டனேசூரவே
தண்டனேவீரியகோதண்டனே-தண்டவளத் 1039

தாரனேசற்குணவிஸ்தாரனேகற்றவர்க்கு
தாரனேயற்றவர்க்காதாரனே-ஆரமுத 1040

சோமனேயன்னசத்ரசோமனேகற்பகப்பூங்
காமனேவிற்கரும்புக்காமனே-நாமகள்சேர் 1041

பெஞ்சைநகர்ச்சிந்தமனற்பேறேசரற்கால
மஞ்சைநிகருந்த்யாகவள்ளலே-அஞ்சித் 1042

தொழுதுங்கவேந்தருக்குத்துள்ளுசீட்டொப்பாம்
எழுதும்பெரியநாகேந்த்ர-எளியோர் 1043

கரங்கள்விரித்தேற்கக்கன்றுகண்டவாபோல்
இரங்கும்பெரியநாகேந்த்ரா-வரங்கள் 1044

செருக்குமதரூபம்போற்சிங்காசனத்தில்
இருக்கும்பெரியநாகேந்த்ரா பருக்கும் 1045

மழைக்கும்பகம்பமதயானைவீரிட்
டழைக்கும்பெரியநாகையா-தழைத்தபுகழ்க் 1046

கூளமகீபன்குமார துரைச்சிந்தமனும்
வாளபயசோதரவசீகரனே-நீள்சகல 1047

தன் வித்தை அரங்கேற்றிமை கூறல்

சம்பனுவென்றுதமிழ்பாடினேன் தமிழிற்
கம்பனுமென்குர்கவிராஜர்-தெம்புபெறக் 1048

கட்டாக நூறுகவிசொன்னேனங்கேயென்
அஷ்டாவதானமரங்கேற்றினேன்-அஷ்டாங்க 1049

யோகக்காவித்துகிலோருள்ளமகிழ்ந்தமிர்த
பாகமெனச்சொல்லப்பண்ணினேன்-த்யாகநிதி 1050

என்னும்பெரியநாகேந்த்ரனகளங்க
மன்னன்திருவாய்மலர்ந்தருளி-என்னைக் 1051

கவிச்சக்ரவர்த்தியென்ருன்காவலாநீயே
புவிச்சக்ரவர்த்தியெனப்போற்றச்-செவிக்குநல்ல 1052

வெகுமதி செய்தமை கூறல்

முத்துக்கடுக்கனெடுமுன்கைதனக்கிணங்கும்
ஹஸ்தகடகம்ரத்நஹாரமணிக்-கொத்துச் 1053

சரப்பணிதும்பிப்பதக்கஞ்சாலுவைபொற்காந்தி
பரப்பியிடுபொற்சரிகைப்பாகை-தரித்தருள்பீ 1054

தாம்பரங்களீந்தான் தருப்போலவனெனக்கங்
காம்பரிசிலீயுமதற்குமுனே-மேம்படுபேர் 1055

திட்டுபுகழ்க்கல்லூர்வாழ்த்திப்பணவேளேன் தலைக்குச்
சூட்டவொருமுத்துராயீந்தான்-தாஷ்டிகோத் 1056

தண்டனெனுங்கூளேந்த்ரன் தம்பியாஞ்சிந்தமனோர்
கண்டசரமீந்தான்கழுத்துக்குக்-கொண்டலெனும் 1057

முத்துராயன்கொடுத்தான்மூன்னணிசுமாக்கியனன்
பத்துவராகன்பெறவோர்பாகீந்தான்-சித்தசனும் 1058

ரங்கப்பன்கைக்கொலுசுநல்கினன்மோதிரமென்
செங்கைவிரலுக்கணிந்தான்சிந்தமவேள்-தங்கவளை

ராசகோபாலையனல்கினன்சீர்கொள்முத்துப்
போசனொருமுத்துவடம்பூட்டினன்-பேசுபுகழ்ச் 1060

சாந்தபூபன்கொடுத்தான்சாலுவைசுன்னகரத்நம்
ஈந்தான்கொடிநாகனென்கையில்-வாய்ந்தபுகழ் 1061

நல்லயனச்சுநடைப்பரியீந்தானுலகம்
சொல்லும்பணிக்காயன்சொக்கலிங்கம்-மல்லிகைப்பூத்

தையலங்கியொன்றெனக்குத்தந்தான்பெரியதம்பி [க்
துய்யவெள்ளிக்குண்டுசொக்காய்தந்தான்- பொய்யுரையா

கூளக்கணக்கன்மணிக்குண்டலந்தந்தானிரண்டு
தோளிற்குணுக்களவாய்த்தூங்கவே-வேளைக் 1064

குதவியதம்பான்கொடுத்தானென்பதுபொன்பட்டுச்
சதுரன்கைலாசதயாளு-புதுவயிரத் 1065

தண்டோட்டிதந்தான்சவாதுப்பரணிதந்தான்
கொண்டசொக்கலிங்கன்கொடுத்தானோர்-முண்டாசு

சட்டமிடுஞ்சொக்கலிங்கன் தந்தான்கணையாழி
கட்டழகன்பாசிபந்துகட்டினன்-பட்டை 1067

யரைஞாண்தந்தான்பொன்னரைச்சட்டை தந்தான்
வரிசையாம்ராமமகிபன்-முருகுமுத்து 1068

சின்னனுதவினன் தீரன் வடகூளன்
பொன்னல்விருதுதண்டை பூட்டினன்-மின்னெறிக்குந்

தாயத்திராமனன்றுதந்தான்திருமலையன்
நேயத்தாற்பொற்பூநிசாறுதந்தான்-தூயதுணைக் 1070

காமனீந்தானற்கறவைபந்துகண்டையிட்ட
சோமனீந்தானரைக்குச்சோடாகச்-சோமனெனும்

சோலைசிவப்புத்துப்பட்டிதந்தான்மாடன்
பாலுக்குக்காராம்பசுத்தந்தான்-மால்குழந்தை 1072

வேலனெனக்கிரண்டுவெள்ளையெருதாய்மேகம்
போலக்கொடுத்தோட்டிப்போவென்றான்-சீலிபூ 1073

பாலன்கொடுத்தானோர்பச்சைவடஞ்சோடங்கி
நாலுமுடிப்புரொக்கநல்கினன்-சீலனெனும் 1074

நல்லமருதன்கொடுத்தானல்லகுதிரைமறி
கல்விதெரிசிக்கணனென் கண்குளிரக்-கொல்லத்துப்

பச்சைக்கபாய் தந்தான்பாரியொத்தகாமியங்கே
மெச்சியெனக்கிரண்டுமேதிதந்தான்-உச்சிதமாக் 1076

கூதலுக்குப்போர்வைதந்தான்கொண்டபூபன்னுலக
நாதன்சகலாத்துநல்கினுன்-மாதங்கக் 1077

கட்டிகொடுத்தனுகக்கவுண்டன்குருவா
ரெட்டிகொடுத்தானதற்குரெட்டிப்பு-கட்டிவிட்டு 1078

நாழிமுத்தைமுத்தையவேணல்கவரதப்பனொரு
தாழிவில்லைபோட்டான்சமூகத்தில்-வாழியென 1079

ரங்கையணிந்தானங்கோரத்நகண்டிராமையனுந்
துங்கன்கொடுத்தான்பொன்தொண்ணூறு-திங்கண்முக

வீரப்பெருமாள்விரலுக்குவச்சிரக்கல்
சேருற்றபொன்மோதிரந்தந்தான்-கோர 1081

அனுமத்துவசருங்கருடடாலர்
கனவிருதுசிங்கடாற்காரர்-எனவாழும் 1082

எல்லாருஞ்செம்பொனிறைத்தாரையானனஞ்சூழ்
நல்லாசனன்பெரியநாகேந்த்ரன்-செல்வத் 1083

துரையெனக்கங்காட்டினுன்சொர்ணபிஷேகம்
வரையெனத்தந்தானேர்மதமா-தாளக் 1084

கவிகைதந்தான்வெள்ளைக்கவரிதந்தான்செம்பொற்
சிவிகைதந்தான்காந்திசிறந்த-ரவிபோல் 1085

இருட்டகற்றுதீவட்டியீந்தான்மதிபோற்
சுருட்டிதந்தான்தந்தான்றுவசம்-பெருத்தசில 1086

ஊர்தந்தானும்பளிக்கையூர்தோறும்பண்ணைவைக்க
ஏர்தந்தான்வாழ்வுக்கிடந்தந்தான்-ஆர்தந்தார் 1087

இந்தத்தியாகமிவனைப்போல்வாவியர
விந்தத்தியாகவந்தமெல்லியலே-இந்தவிதம் 1088

விறலியைத் தூதுவிடுத்தமை கூறியது

என்செய்தியாதிதொடர்ந்தெல்லாமுனக்குரைத்தேன்
பொன்செய்தவெம்மூர்க்குப்போயினிநீ-மின்செய்த 1089

சிற்றிடையாளாகியவென்தேவியாரைக்கண்டு
நற்றிறஞ்சேர்வீணைநயம்பாடி-மற்றவளுக் 1090

கென்குறையைமெள்ளவியம்பியெதிர்சொல்லுமந்தப்
பொன்குறையுங்கேட்டுடல்போக்கியே-நன்குறுமென்

ஆசைமனையாட்டிதனக்கையங்காரின் னுமொரு
வேசைமனைக்கேகுவரோவிட்டெனா-வாலோசனையுட்

கொள்ளாமலென்சபதங்கூறிமுன்னைக்குற்றநினைந்
தெள்ளாமற்கற்பினியல்போதி-உள்ளாளப் 1093

பண்பாடியுட்காமபாணம்படச்செய்து
நண்பாடியென்வரவைநன்கேற்றுக்-கண்பார்க்க 1094

ஓகையாய்முன்போலுறவாக்கச்செல்வாழி
தோகைவிறலிநீ-தூது. 1095

விறலிவிடு தூது முற்றுப்பெற்றது.

ஸ்ரீ வித்தியா பிரஸ், சென்னை,

புத்தக விளம்பரம்

		ரூ.	அ.
ஸ்ரீமத் கம்பராமாயண வசனம் (படங்களுடன்)		12	0
ஸ்ரீமத் கந்தபுராண வசனம்	,,	12	0
ஸ்ரீமஹா பாரத வசனம் கிளேஸ்	,,	25	0
ஸ்ரீமஹா பாரத வசனம் திக்கு	,,	20	0
ஸ்ரீமஹா பாரத வசனம் ரப்பு	,,	16	0
திருவிளையாடற் புராணம்	,,	4	0
நாலாயிர பிரபந்தம்	,,	8	0
விக்கிரமாதித்தன் கதை	,,	4	0
பஞ்சபாண்டவர் வனவாசம்	,,	1	8
அபிமன்னன் சுந்தரிமாலை	,,	1	8
மதனகாமராஜன் கதை	,,	1	8
புல்லியரசாணி மாலை	,,	1	0
...சக்கிரவர்த்தி கதை	,,	1	0
கிருஷ்ணன் தூது	,,	0	12
கோவலன் கதை	,,	0	12
சித்திராபுத்திரன் கதை	,,	0	12
மயிலிராவணன் கதை	,,	0	12
தேசிங்குராஜன் கதை	,,	0	12
நல்லதங்காள் கதை	,,	0	8
சிறுத்தொண்டபத்தன் கதை	,,	0	10
மனையடி சாஸ்திரம்		1	0

P. L. அருணசல முதலியார் & பிரதர்ஸ்,

15, படவட்டம்மன் கோயில் தெரு,

பெரம்பூர் பாரக்ஸ் போஸ்டு, சென்னை.